உ
குருபாதம்
# ஞானசம்பந்தம்
மலர் 33 | ஆனந்த - புரட்டாசி - 10—10—74 | இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

# வேளாண்மை வெற்றிபெற

**வேளாண் தொழிலின் விழுப்பம்:**

**'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'** என்று மணிமேகலை பாடிற்று. உணவு தரும் பணி உயிர் காக்கும்பணி; உணவை விளைவிக்கும் தொழில் உத்தமமான தொழில் ஆகும். உணவை விளைவிக்கும் பணி மேற்கொண்ட மக்களை வேளாளர் என்று தமிழ் குறிக்கும். 'வேள்' என்பது மண் என்னும் பொருள் உடைய சொல் ஆதலின், மண்ணை உழுது பண்படுத்தி ஆளும் மாண்புடைய மக்களை 'வேளாளர்' என்று கூறுவது எவ்வளவு பொருத்தம் ஆனது! அதுபோல மண்ணைப் பிசைந்து மண்பாண்டங்கள் செய்யும் குயவர்களை வேளார் – வேட்கோவர் – மண்ணுடையார் என்று அழைக்கிறோம் அல்லவா? கழனியில் இறங்கி உழவு தொழில் செய்வோரும், உழவு தொழில் செய்விப்போரும் என வேளாளர்களை இருவகை ஆகக் குறிக்கலாம். உழுதுண்ணும் வேளாளர், உழுவித்துண்ணும் வேளாளர் என்று இவர்களைக் குறிப்பர் தொல்காப்பியர்.

"வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"

என்று தொல்காப்பியரே உரைப்பாராயின், இத்தகைய வேளாண் குடிப் பெருமக்களுடைய தொன்மையும் தொழிலும் பற்றி உரைத்தலும் கூடுமோ? திருஞானசம்பந்தர், இவ்வேளாண் குடிமக்களை, 'வேளாளர் என்பவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும் தாளாளர்' என்று வாழ்த்தியருளுகிறார்கள்.

## ஆற்றுப் பாசனம்:

இந்திய நாடு வேளாண்மைத் தொழில் விளங்கும் திருநாடு. நெல் முதலிய தானிய வகைகளைப் பயிரிடற்கேற்ற பெரும் நதிகள் இந்நாட்டை அணி செய்கின்றன. கங்கை, காவிரி, சிந்து, பிரம்மபுத்திரா முதலிய பேராறுகள் பாரதத் தாய்க்கு ஆரம் போல் விளங்குவதுடன், கால்வாய்களின் வழியே பாய்ந்தோடி விளைச்சலைப் பெருக்கும் வித்தகத்தைப் புரிந்து வருகின்றன. தானியங்களின் நற்றாய் நிலமகள். செவிலித் தாய் ஆறுகள்.

## விலைவாசி உயர்வு:

இன்றைய நிலையில் உழவர் - வேளாளர் நிலை யாது? நெல் முதலிய பயிர்களை விளைவிக்கும் வேளாண் குடிமக்கள் இரங்கத் தக்க நிலையில் உள்ளனர் என்றே கூறவேண்டும். மத்திய அரசும், மாநில அரசும் நெல் விலையை ஓர் அளவிற்கு உயர்த்தி நிர்ணயித்து உள்ளன. நெல்லை விளைவிக்கும் வேளாண்மைக் குடியினர், வாங்கிப் பயன்படுத்த வேண்டிய பிற எல்லாப் பொருள்களின் விலையும் ஏறியுள்ளது. அவர்களது வாழ்விற்குத் தேவையான, தொழிலுக்குத் துணை புரியக்கூடிய உரம் முதலிய அன்றாடப் பொருள்களின் விலை அனைத்தும் ஏறியுள்ளன. மற்றவர்கள் வாழ வழிவகுக்கும் இம்மாண்புடையோர் இடர்ப்படுவது வரவேற்கத்தக்கதொன்றன்று.

## உழவர்கள் துன்பம்:

விலைவாசி ஏற்றத்தால் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் தேவைக்கேற்ற கூலி மிகுதி வேண்டும் என்று கோருவதும் இயல்பே. அதுபோன்றே வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவரும் கூலி மிகுதி வேண்டுமென்று கோருகின்றனர். அரசினர் ஊதியத்தினை உயர்த்துகின்ற

நிலேயும், அதற்கேற்பப் பொருட்களின் விலே உயர்கின்ற நிலேயும், அதனைக் காரணம் காட்டி மேலும் ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்று கூவுவதும், விலேவாசி மேலும் உயர்கின்ற நிலேயைக் கண்டு, ஊதிய அளவைப் பின்னும் உயர்த்த வேண்டுவதும் ஆகிய காட்சிகள் இன்று காணப்படுகின்றன. விலேவாசி ஏற்றமா அல்லது ஊதிய உயர்வா எது முந்தியது, எது பிந்தித் தொடர்வது என்று எண்ணுவது, வித்து முந்தியதா அன்றி வித்தினின்று மரம் முந்தியதா என்று எண்ணுவதைப் போன்றதாக உள்ளது. பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் இன்னதென்று தக்க அறிஞர்கள் இன்னும் சிந்தித்த வண்ணம் இருக்கின்றனர். கள்ளக்கடத்தல் ஒழிப்பினுல் உணவுப் பண்டங்களின் விலே ஓரளவு குறைந்து வருகிறது என்று கூறுகின்றனர்கள். அவ்வாறுயின் அரசு தக்க பரிகாரம் காண வேண்டியது இன்றியமையாததாகும்.

## ஏனைய பண்டங்களின் விலே ஏற்றம் தடுப்பு:

நெல்லின் விலேயை உறுதிப்படுத்தியது போன்றே ஏனைய விலேகளேயும் அரசு உறுதிப்படுத்துவதுடன் குறைத்தலும் வேண்டும். அப்போதுதான் பரவலான விலே நிலே நாடு முழுதும் அமலாகும்; மக்கள் படும் துன்பங்கள் துடைக்கப்படும். குறிப்பாக — சமுதாயத்தின் அடிநிலேயர்கக் கருதப்படும் வேளாண்மைத் துறையைச் சார்ந்த உழவர் பெருங்குடி மக்களின் இடர்கள் நீங்கும். நியாயமற்ற வேலே நிறுத்தங்களும், கிளர்ச்சி களும், காரணமற்ற போராட்டங்களும், அதன் விளேவாக வீண் உயிர்ப் பலிகளும் உடனடியாக மாநிலமனைத்திலும் நிறுத்தப்பட இச்செயல் பெருந்துணே புரிவதாக அமையும் என்பது உறுதி.

## இன்றியமையாத் தேவை:

நம் இந்திய அரசு வேளாண்மைத் துறை செழிக்கத் தன்னுடைய ஐந்தாண்டுத் திட்டங்களில் பல்வேறு பணிகளேத் திட்டமிட்டுக் கொண்டு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. அஃதனைத்திற்கும் 'நெல்விலேக் கட்டுப்பாடு' துணே நிற்பதாகும். வயல்கட்கு இடும் உர விலே இரண்டு பங்குக்கு மேல் உயர்ந்துள்ளமை உழவர்கள் மனத்தை வருத்துவது அறிதற் குரியது. வேளாண்மைத் தொழில் சிறந்து விளங்க மற்றைய பொருள்களின் விலேகளேக் கட்டுப்படுத்துவது இன்றியமையாத தாகும். இத்தகு கடமைகள் இன்றைய நிலேயில் மிக மிகத் தேவைப்படுகின்றன.

## தருமையாதீனம்

# ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயில்

# நவராத்திரி விழா

[16—10—74 முதல் 25—10—74 முடிய]

மலரில் மணம்போலச் சிவபரம் பொருளோடு பிரிப்பின்றி விளங்குபவள் அம்பிகை. அருளே வடிவாய் விளங்கும் அவ் அம்பிகை, பல்வேறு நிலைகளில் தோன்றி உயிர்கட்கு நலம் செய்கின்றாள். மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான செல்வம் கல்வி ஆகியவற்றுக்கு அதிதெய்வங்களாக துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி என்ற திருப்பெயர்களோடு அம்பிகையை வழிபடுதல் நம் சமய மரபு. மதுகைடபன் முதலான ஒன்பது அசுரர்களை அழித்து அருள்செய்த தேவியின் திருநாட்களாகிய நவராத்திரி விரதமிருந்து அம்பிகையை வழிபடுவோர் விரும்பிய அனைத்தையும் பெறுவர் என்று சப்தசதி நூல் கூறுகிறது.

நவராத்திரி சாரதா நவராத்திரி என்றும் வசந்த நவராத்திரி என்றும் சிறப்பாக இருவகைப்படும். புரட்டாசி மாதம் வளர்பிறை முதல் நாள் தொடங்கி 9 நாட்கள் கொண்டாடப்பெறுவது சாரதா நவராத்திரி. பங்குனி மாதம் வளர்பிறை தொடங்கி 9 நாட்கள் கொண்டாப் பெறுவது வசந்த நவராத்திரி எனப்படும். இந்நாட்களில் தேவியை ஆராதனைகள் செய்வோர், ஆயுள், ஆரோக்யம், ஐசுவரியம் முதலிய அனைத்தையும் பெறுவர்.

தருமையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி, லக்ஷ்மி அம்சமும், துர்க்கை அம்சமும் கலந்த நிலையில் பதினெண் கரங்களோடு சிவசக்தி முதலான எல்லாத் தெய்வ சக்திகளும் திரண்டு ஒன்றாய் விளங்குவதை விளக்கி நிற்கும் அம்பிகையின் திருவுருவமாகும். இவ்வம்பிகைத் திருக்கோயிலில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறுகிறது.

சதசண்டிவேள்வி, சுவாசினீ குமாரி வடுபூஜைகள், சதுர் வேதபாராயணம், துர்க்காசூக்த பாராயணம், திருமுறைப் பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம், துர்க்காதேவிக்கு லக்ஷார்ச்சனை, மேருவிற்கு சகஸ்ர நாமார்ச்சனை, விசேஷ அபிஷேக ஆராதனைகள் முதலியன நடைபெறும்.

24—10—74 காலை சப்தசதி ஹோமம். மகாபூர்ணாகுதி, சதசண்டி ஹவன பூர்த்தி.

25—10—74 காலை ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு யாக கலசாபிஷேகம்.

அன்பர்கள் சதசண்டி வேள்வி, லக்ஷார்ச்சனை, அபிஷேக ஆராதனைகள் முதலியவற்றிற்குக் காணிக்கைகள் செலுத்திப் பங்குகொள்ளலாம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத்
தருமையாதீனம் 26வது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

கீழப்பெரும்பள்ளம்

அருள்மிகு, கைலாயநாதர் திருக்கோயில் வழிபாட்டிற்கு
9—8—1974இல் எழுந்தருளியபோது
அன்பர்களிடையே வழங்கியருளிய

# அருளாசி

"வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடையார்க்குஉள வாகிய சின்னங்களே."

– அபிராமி அந்தாதி

### திருவலம்புரத் தரிசனம் :

கீழப்பெரும்பள்ளம் – மேலப்பெரும்பள்ளம் ஆகிய இரு தலங்களிலும் எழுந்தருளியுள்ள இறைவனையும் இறைவியையும் ஆடி வெள்ளிக்கிழமையாகிய இன்று வழிபடும்பேறு நமக்குக் கிடைத்தது. எந்த ஒரு செயலும் நடைபெற வேண்டுமானல் அதற்கு ஓர் அடிப்படையான காரணம் வேண்டும். காரணம் இன்றி ஒருபோதும் காரியங்கள் நிகழா. நாமே இத்தலங்களைத் தரிசிக்க நினைத்திருந்தாலும், இதுபோது இங்குள்ள அன்பர்கள் அழைத்த காரணத்தாலேயே இன்று தரிசனம் கிடைத்தது.

### பழவினையே காரணம் :

மனிதவாழ்வில் நடக்கும் நன்மை, தீமைகள் யாவற்றிற்கும் அடிப்படையான காரணத்தையே நம்முடைய பெரியவர்கள் வினை

என்று குறிப்பிட்டனர். நெடுநாட்களாகக் குழந்தைப்பேறு இல்லாத அன்பர் ஒருவர் இக்கோயில் திருப்பணியில் ஈடுபட்டுத் திருப்பணிகளை நிறைவேற்றிய பின்னர், அவருக்குக் குழந்தைப் பேறு வாய்த்தது என்று இங்கே அன்பர்கள் குறிப்பிட்டார்கள். சில இடங்களைத் தரிசித்ததால் நோய் நீங்கியது என்றும் பலர் குறிப்பிடக் காண்கின்றோம். மேம்போக்காக இச் செயல்கள் ஒரு காரணம்போல் தோன்றினும் இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணம் பழவினையே என்பதை நம்மில் பலர் உணர்வதில்லை.

## மனம் திருந்த வேண்டும் :

இன்றைய நாட்டுநடப்பில் சில விஷயங்களை மக்களுக்குச் சொல்லவேண்டுவது அவசியமாகிறது. எல்லாம் தெரிந்தவர்கள் மனித குலத்தில் இல்லை. சுயநலப் போக்குள்ள இன்றைய மனிதர்களின் மனங்கள் திருத்தமுற வேண்டும். நாடு திருந்த வேண்டுமானல் வீடு திருந்த வேண்டும். தனிமனிதன் திருந்தினல் அல்லது நாடு திருந்தாது. இந்தத் திருத்தம், தாமேமக்களுக்கு, வந்துவிடும் என்று எதிர்பார்ப்பதில் பயனில்லை. தீமைகளைப் பார்க்காதே! தீமைகளைக் கேட்காதே! தீமைகளைப் பேசாதே! என்பதை விளக்க இங்கு மேடைமீது மூன்று குரங்குப் பொம்மைகளை வைத்திருக்கிறார்கள். இவற்றை எல்லாம் பார்த்தே, தம்மைத் திருத்திக்கொள்வது மேல் மக்களுக்கே இயல்வது. சாதாரண மக்களுக்கும் பக்குவம் வரவேண்டுமானல் நாம்அவர்களைச் சந்தித்து, உண்மைகளை எடுத்துரைத்தல் வேண்டும். முன்னர் வாழ்ந்த பெரியவர்களும், அருளாளர்களும் எப்படித் தங்களை வளர்த்துக் கொண்டார்கள் என்பதற்கு வரலாறுகள் உண்டு. அந்த வரலாறுகளை நாம் மக்களிடையே எடுத்துச்சொல்ல வேண்டுவது இன்றைய நிலையில் தேவைப் படுகிறது. இன்றைக்குத் திருத்தம் பெற வேண்டியவர்கள் இளைஞர்களும், கீழ்நிலையில் உள்ளவர்களும் மட்டுந்தான் என்பதில்லை. முதியவர்களும் மேல் நிலையில் உள்ளவர்களும்கூட திருத்தப்பட வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள்.

## தகுதியும் பக்குவமும் தேவை :

ஒரு பெரியவர் தன் மகன் இனிப்புப்பண்டங்களை அதிக விருப்பத்தோடு அடிக்கடி உண்பதை நிறுத்த எண்ணினர். ஆனல் மகன் கேட்கவில்லை. தான் பெரிதும் மதிக்கும் துறவி ஒருவரிடம்

மகனை அழைத்துப்போய், இவன் அடிக்கடி இனிப்பு உண்ணும் பழக்கத்தைக் கைவிட, ஆசீர்வதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். துறவியோ, 'ஒருவாரம் கழித்து அழைத்து வருக' என்றார். அடுத்த முறை வந்தபோது 'பதினைந்து நாட்கள் கழித்து வருக' என்றார். மூன்றும் முறை வந்தபோதும் இதேபோல் 'ஒரு மாதம் கழித்து அழைத்து வருக' என்றார். அடுத்து வந்த போது துறவி, அச்சிறுவனிடம் 'இனிப்பை மிகுதியாக உண்பது கூடாது. அது உடலில் பலவகையான நோய்களை உண்டாக்கும். குறைத்து உண்டால் நோய் நீக்கத்துடன் நலமாக வாழலாம்' என்று கூறினர். அன்று முதல் அச்சிறுவனும் இனிப்புப்பண்டம் உண்பதை அறவே நிறுத்திவிட்டான். பின்னர் ஒரு நாள் பெரியவர், துறவியாரிடம் வந்து, சிறுவன் இனிப்பு உண்பதை நிறுத்திய செய்தியைக் கூறிவிட்டு, தாங்கள் பலமுறை வரச் சொல்லிய காரணம் என்ன என்று அடக்கத்தோடு வினவினர். துறவியார், 'தாங்கள் வந்தபோது நான் இனிப்பு உண்ணும் பழக்கம் உடையவனாக இருந்தேன். நான் என்னைப் பக்குவப் படுத்திக் கொள்ளாமல் பிறருக்குச் சொல்வது பொருந்தாது; அப்படிச்சொன்னால் கேட்பவர்களும் திருந்தமாட்டார்கள். அதனால்தான், நான் முதலில் என் பழக்கத்தை நிறுத்தி, என்னைத் தகுதியாக்கிக் கொண்ட பின்னரே, சிறுவனுக்கு இனிப்பு உண்பதால் வரும் தீமையை விளக்கிச் சொன்னேன். அவனும் அதைக் கேட்டுத் திருந்தி நடக்கிறான் என்பது மகிழ்ச்சிக்குரியது. நல்லவற்றைப் பிறருக்கு எடுத்துச் சொல்பவர்கள், தம் வாழ்க்கையில், தம் கொள்கையைப் பின்பற்றி நடக்கவேண்டும். தாம் கடைப்பிடித்தால்தான் தம் கொள்கையை - தம்சொல்லைப் பிறர் மதிப்பார்கள்; கேட்டு நடப்பார்கள். நடைமுறையில் இனிப்பு உண்பதை மேற்கொண்டிருந்த என்னைத் திருத்திக் கொள்ளவே இத்தனைகாலம் தேவைப்பட்டது. திருவள்ளுவரும்,

> "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
> சொல்லிய வண்ணம் செயல்".

என்று கூறியுள்ளமை இக்கருத்தை வலியுறுத்தல் காணலாம்.

அதைப்போலவே கேட்பவர்களும் அப்பக்குவம் உடைய வர்களாக இருக்க வேண்டும். பக்குவம் உடையவரா என்பதைத் தேர்ந்து பார்த்தே தம் கொள்கையைச் சொல்ல வேண்டும். நான் தங்களைப் பன்முறை வரச்சொல்லியதைக்

கேட்டு, அதன்படி தாங்களும் சிறுவனை அழைத்துக்கொண்டு வந்ததால், 'சொன்னால் சிறுவன் கேட்பான்' என்ற நம்பிக்கை எனக்கும் பிறந்தது. ஆகவேதான் சொல்ல முடிந்தது. சொல்ப வருக்கும் சொல்லத் தகுதி வேண்டும். கேட்பவருக்கும் கேட்டு நடக்கும் பக்குவம் வரவேண்டும். நீங்களும் என் அறவுரைகளைக் கேட்கும் ஆர்வமுடையவர்கள்தானா என்பதை அறியப் பலமுறை வரச்செய்தேன். அச்சோதனையில் உங்களுக்கு அறவுரைபெறும் தாகம் இருப்பதை அறிந்தேன்' என்று கூறினார் துறவியார். ஸ்ரீகுருஞானசம்பந்தர்,

> ' அன்பு மிகஉண்டாய் அதிலே விவேகம் உண்டாய்த்
> துன்ப வினையைத் துடைப்பதுண்டாய் - இன்பம்
> தரும் பூரணருக்கே தாகமுண்டாய் ஓடி
> வரும் காரணர்க்கு உண்மைவை.''

என்று கூறியருள்கிறார். இத்தகைய வேட்கை உடையவர்கள்தானே பெற்ற அறிவுரைகளைப் போற்றிப் பயன் கொள்வர்.

### உண்மைச் சைவர்கள் :

இன்றைய நிலையை இக்கதை நன்கு விளக்கும். அன்பர், நாகலிங்கம் பிள்ளை பலமுறை நம்மை வந்து இங்கே எழுந்தருள அழைத்தமைபற்றிக் குறிப்பிட்டார். இதனால் அவர் பக்குவப் படவில்லை என்பது கருத்தல்ல. சைவர்களாக இருப்பவர்கள் அனைவருமே திருக்கோயில்களில் வழிபாடு நிகழ்த்துபவர்களாகவும், சைவத் திருமடங்களோடு தொடர்புடையவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதே நமது விருப்பம். பள்ளியிலும் கல்லூரியிலுமாக, முறையாகப் பயிற்சி பெறுதவர்கள் எப்படி பி. ஏ., எம். ஏ., முதலிய பட்டங்களைப் பெறுதல் கூடும். அது போல, சைவத்திருமடங்களோடு தொடர்பில்லாத நிலையில் சைவர்கள் எப்படி உண்மைச் சமயநோக்கு உடையவர்களாக - சைவர்களாக விளங்க முடியும்? பிறப்பால் சைவர்கள் என்ற நிலையை விடுத்துச் சைவக் கொள்கைகளை அறிந்து கடைப் பிடிப்பதன் மூலம் சைவர்கள் எனப் பெருமை கொள்வதே தக்கதாகும்.

### திருக்கோயில்களும் திருமடங்களும் :

இம்மை வாழ்வைப் பற்றியே நமது வாழ்க்கை இன்று அமைந்துள்ளது. மறைவுக்குப்பின் நாம் எங்கே போகிறோம்,

நம் நிலை என்ன? முற்பிறவிக்கும் இப்பிறவிக்கும் உள்ள தொடர்பு, இப்பிறவிக்கும் அடுத்த பிறவிக்கும் உள்ள தொடர்பு யாது? என்பன போன்ற வினாக்களுக்கு உரிய விடைகளையே நமது சமயமும் - சமயப் பேராசிரியர்களும் தெளிவாக விளக்கி உள்ளார்கள். இவற்றை அறிவிப்பதற்கே கோயில்களும் - மடாலயங்களும் உள்ளன. தன்னை நாடி வருபவர்களுக்கு உறுதிப் பொருள்களைக் கூறவேண்டிய கடமை திருக்கோயில்களுக்கும் - திருமடங்களுக்கும் உண்டு. மனிதர்கள் எல்லோரும் சமமான வர்கள் இல்லை. உயிர் வளர்ச்சிக்கு உரிய படிப்பினை எந்தப் பள்ளியிலும் இன்று கற்றுத் தருவதில்லை. மனம் அடங்கக் கற்கும் கல்வி இன்று வேண்டும். இவற்றை விளக்கவும், அனுபவங்களைக் கூட்டுவிக்கவும் திருக்கோயில்களும் - திருமடங்களும் உள்ளன. இவற்றின் தொடர்பின்றி வாழ்பவர்கள் பிறந்த பிறவியின் பயனையே சிந்திக்காதவர்களாகவே மறைகிறார்கள்.

## அனைவர்க்கும் உரிய கடமை:

நாம் கோயிலுக்குப் போவதால் - கோயிலுக்குப் பெருமை என்பதில்லை. நமக்கே நலம் விளைகிறது. பள்ளிக்கு மாணவன் தன் வளர்ச்சிக்காகப் போகிறானே அன்றி, பள்ளிக்கூடம் வளர்ச்சி பெற வேண்டுமென்று செல்வதில்லை. நம்மை நாம் திருத்திக் கொள்ளவும், அறவுரை பெறவும் நாம் அறநிலையங்களை நாடுதல் வேண்டும். இன்று திருக்கோயில்களிலும், திருமடங்களிலும் இத்தகு அறவுரைகளை எடுத்துச் சொல்லத்தக்கவர்கள் இருக் கிறார்களா? என்று கேட்பதில் பயன் இல்லை. நமக்கு விளக்க மின்மையும் சோம்பலுமே இக்குறைபாடுகளுக்குக் காரணம். கோயிலுக்கு அடிக்கடி நாம் சென்று, அங்குள்ள சிவாசாரியர்களை சமய நுட்பங்கள் பற்றி வினவ வேண்டும். ஏன் வெள்ளிக் கிழமைகளில் வழிபடுதல் சிறப்பாகக் கருதப்படுகிறது? அதுவும் ஆடி வெள்ளியும் தை வெள்ளியும் பாராட்டப்படுவது எதனால்? என்றெல்லாம் கேட்கத் தொடங்கினால், அவர்களுக்குத் தெரிய வில்லை என்றாலும் தக்கவர்களை விசாரித்தாவது சமய நுட்பங்களை அவர்கள் தெரிந்து வைத்துக்கொள்வதோடு மற்றவர்களுக்கும் விளக்கிச் சொல்வர். எனவே, கோயில் மடங்களில் இருப்பவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் என்பதைவிட, அவர்களைத் தெரிந்தவர் களாக மாற்றுவதில் நமக்கும் பங்கு உண்டு, என்ற எண்ணம் பக்தர்களுக்கு வர வேண்டும். நாம் அடிக்கடி அறநிலையங்களோடு தொடர்பு கொள்ள வேண்டும். இது சைவர்களாக இருப்பவர்கள் அனைவருக்கும் உரிய கடமை ஆகும். பக்தர்கள் கோயிலுக்கு வருகிறார்கள் என்றால்தான் கோயில் நிர்வாகிகளும் அர்ச்சகர் களும் கோயிலைத் தூய்மையோடும், அருள் விளக்கத்தோடும்

பேணுவார்கள். ஒருவரும் வரவில்லை யென்றால் யாரும் நம்மைக் கேட்கமாட்டார்கள் என்ற நினைப்பில் அவர்களும் அலட்சியமாக இருப்பார்கள். கிணற்றைப் பாழ்ங் கிணறு என்று கூறுவது அறியாமை. நாம் நாள்தோறும் அதனைப் பயன்படுத்தி இருந்தால் அதுவும் நன்னீர்க் கிணறாக விளங்கும். நமக்கும் நீர் கிடைக்கும். அறநிலையங்களின் வளர்ச்சியும் சிறப்பும் மக்களின் தொடர்பால் தான் சிறப்படைய முடியும் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

## இறைவனின் எளிவந்த கருணை :

சிறுவர்கள் குணமே பெரியவர்களிடமும் படிந்துள்ளது. அவர்களை இதமாகவும் – பதமாகவும் சொல்லியே ஈர்க்க வேண்டியுள்ளது. சிறுவர்களிடம் கடுமையாகச் சொல்லி கட்டளையிட்டால் எந்த ஒரு செயலையும் செய்ய இணங்கமாட்டார்கள். ஆனால் இதமாகச் சொன்னால் கேட்டு நடப்பார்கள். தற்காலத்தில் பெரியவர்களும் பெரும்பாலும் அப்படியே இருக்கிறார்கள். செய்ய வேண்டியது தம் கடமை என்று எண்ணுவதில்லை. மனம் பக்குவம் உடையவர்களாய் செயல்பட்டால் நாட்டின் நிலை உயரும்; சமுதாயம் வளர்ச்சிபெறும். நாம் இங்கே எழுந்தருளியதுபற்றிக் குறிப்பிட்டீர்கள். யாரும் எங்கும் போகலாம். நாம் வழிபடும் கூடற் பெருமானே எளிவந்த கருணையுள்ளம் கொண்டவனாய், ஆற்றலிற் குறைந்ததாயின்றி வருந்திய பன்றிக்குட்டிகளுக்கு அவற்றின் தாய்ப் பன்றியாகச் சென்று பால் கொடுத்து அருள் செய்தான். தன்பால் பக்தி உள்ளம் கொண்டுள்ள வந்தியம்மையின் துயர் துடைக்கக் கூலியாளாய்ச் சென்றான். அதுபோல நாமும் இங்கே எழுந்தருள் வதால் பயன் விளைவதாக இருக்க வேண்டும். சிலருக்காவது பயன் விளைய முடியுமென்றால் வருவதில் மகிழ்ச்சி அடைவோம்.

## முன்பு செய்தவத்தின் பயன் :

நாவரசரும், மணிவாசகரும் நமது குருமுதல்வராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானும் போன்ற அருளாளர்கள் நாம் கடைத்தேற எவ்வளவோ அறவுரைகளை விளக்கியுள்ளனர். அவற்றை முதலில் நாம் உணர்வதில்லை. அவை அனுபவத்திற்கு வரும்போது பாராட்டுகிறோம். பெரியவர்கள் அனுபவத்தையொட்டி நாமும் முன்னேற வேண்டும். சொன்னதைச் சொன்னபடி நடைமுறைப்படுத்தி வாழ நாம் பழகிக்கொள்ள வேண்டும். தாம்

சொல்லியவற்றை முழுவதும் நிறைவேற்ற எல்லோராலும் இயலாது என்றாலும் இயன்ற அளவு சொல்லியவண்ணம் நிறைவேற்ற நடைமுறையில் பழகிக்கொள்ள வேண்டும். நாம் தொடங்கும்போது எடுத்துரைத்த அபிராமி அந்தாதிப் பாடலை நன்கு கவனித்தால் ஒரு உண்மை புலப்படும். இம்மையில் யானை, குதிரை, தேர் முதலிய அரச சின்னங்களோடு ஒருவன் வாழ்கின்றான் என்றால் அவன் முற்பிறப்பில் இறைவனடியில் செலுத்திய பக்திமையும் செய்த தவமுமே அதற்கு அடிப்படை என்பது விளங்குகிறது. நாட்டில் இல்லாதவர் பலராகவும் செல்வந்தர்கள் சிலராகவும் இருப்பதைக் காண்கின்றோம், இதற்குக் காரணம் முன்னைத் தவத்தின் பயன் என்பதை உணர வேண்டும். முற்பிறவியில் நல்வினைக்குக் காரணமாகிய தானம், தவம் முதலிய புண்ணியம் செய்தவர்கள் இம்மையில் வளம் பல பெற்று வாழ்வதோடு மறுமையிலும் இறைவனின் திருவடிப் பேற்றுக்குரியவர்கள் ஆகின்றார்கள். முற்பிறவியில் தானம், தவம் முதலிய புண்ணியச் செயல்களில் ஈடுபடாதவர்கள் நோய்களாலும் வறுமையாலும் துன்புறுகின்றார்கள். இதனையே திருவள்ளுவரும்,

"இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோவாதவர்"

என்று கூறுவதைக் காணலாம்.

இறைவன் ஆட்சி அற ஆட்சி! அங்கே அநீதி என்ற பேச்சே இல்லை. நன்மை செய்தவர்களுக்கு அவன் நன்மையே தந்து வளர்க்கிறான்! தீயவர்க்குத் தீமையே தந்து திருந்துகிறான்! இந்த அற உணர்வினை நாடு பெற்றுத் திருந்த வேண்டுமானால் மக்களை நெறிப்படுத்த வேண்டுமானால் – இவர்களை ஈன்றெடுத்த மாதா – பிதாக்களும், உணர்த்தும் குருநாதனும் சரியாகக் கடமையினைச் செய்து காட்டித் தம்மைச் சார்ந்தவர்களைத் திருத்தவேண்டும். இளமை முதலே அறநெறிகள் புகட்டப் பட்டாலொழிய வருங்காலச் சந்ததிகளாவது திருத்த முறுவார்களா என்பது சந்தேகமாகவே இருக்கும்.

## துறவியின் தியாகம் :

வலம்புரம், காவிரித் தென்கரைத் தலங்களுள் ஒன்று. பாடல்பெற்ற இத்தலத்திற்கு வழிபாட்டிற்கு எழுந்தருளினைத்தோம். வலம்புரம் பற்றிய புராணவரலாறு ஒன்று தியாக உணர்வை ஊட்டத்தக்கது. ஒருமுறை பெருக்கெடுத்து வந்த காவிரி கும்பகோணத்திற்கு அண்மையில்உள்ள திருவலஞ்சுழியில் வரும்போது, வலமாகச் சுழித்தோடி பாதளத்துள் புகுந்து விட்டது. காவிரியின் வளத்தைப்பெற முடியாத மக்கள் இறைவனை வேண்டிக் குறையிரந்தனர். அரச முடியோ அன்றி ஓர் துறவி ஜடா முடியோ பலியிடப்பெற்றால் காவிரி மீண்டும் வெளிவந்து

பாயும் என ஓர் அசரீரி தோன்றியது. நாடு காக்கும் மன்னன் பலியிடப் பெறுவதைவிட நாமே நம்மைப் பலியிட்டுக் கொள்ளலாம் என்று கருதிய ஏரண்ட முனிவர் தம்மையே பலியிட்டார். காவிரி மீண்டும் வெளிவந்து பாய்ந்தோடியது. வலஞ்சுழியில் தம்மைப் பலியிட்டுக்கொண்ட ஏரண்ட முனிவர் வலம்புரத்தில் வந்து எழுந்தருளினர். தன்னலங் கருதாது மக்கள் வாழ்விற்காகத் தம்மையே தியாகவுணர்வுடன் அர்ப்பணித்த ஏரண்டமுனிவரின் திருவுருவம் இன்றும் இக்கோயிலில் இருக்கிறது. இத்தகைய பாடல்பெற்ற திருத்தலமாகிய வலம்புரத்துக்கு எழுந்தருளக் கருதிய நம்மை இவ்வூர் அன்பர்கள் அழைத்தனர். மேலப் பெரும்பள்ளம் என வழங்கும் திருவலம்புரத் தரிசனம் கிடைத்தது.

## அருள்நெறி வாழ்க்கைக்குக் கால்கோள் :

கீழப்பெரும்பள்ளத்து மக்கள் தங்கள் ஊரில் தனியே ஒரு சிவாலயம் இல்லாத குறையை உணர்ந்து ஒரு ஆலயம் எழுப்பி உள்ளனர். கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. இதனை உணர்ந்த இவ்வூர் மக்கள் இங்கே ஓர் அழகிய கோயிலை நிர்மாணித்துக் குடமுழுக்கும் செய்வித்து அதன் மண்டாலபிஷேக நிறைவிற்கு நம்மை அழைத்த போது நாமும் மகிழ்வுடன் வழிபாட்டிற்கு எழுந்தருளினோம். இங்கு நாம் எழுந்தருளுவதற்கு முன்பே - ஓராண்டிற்கு முன்பே நமது ஆதி பரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பெயரால் வார வழிபாட்டுக் கழகம் அமைத்து அதன் மூலம் அருள்நெறி போதனைகளும் வார வழிபாடுகளும் நடத்தி வருவது மகிழ்ச்சி தருகிறது. கும்பாபிடேக விழாவில் ஏதேனும் குற்றங்குறைகள் நேர்ந்திருப்பினும், அதனை நிவர்த்தி செய்து கொள்வதற்காகவே இந்த மண்டலாபிஷேகத்தை நடத்துகிறோம். இன்று இங்கே நீங்கள் குழுமியுள்ளது போல் தினமும் வந்து வழிபடவேண்டும். மக்கள் வந்தால்தான் கோயில்களுக்குச் சக்தி. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்பது' நம் நாட்டுப் பழமொழி. பரிந்து மகிழ்ந்து வர அழைத்தால் இறைவன் வருவான் என்பது நமது முன்னோர் வாக்கு. எனவே, கோயில் கட்டியாயிற்று; கும்பாபிடேகம் முடிந்தது; மண்டலாபிஷேகமும் நடந்தேறியது; இனி கோயில்பக்கம் வேலை இல்லை என்று கருதாது 'இவை அருள் நெறி வாழ்க்கைக்குக் கால்கோள், தொடக்கவிழா' என்று கருதி நாளும் வந்து வழிபட்டு இம்மை மறுமைப் பயன் பெற வேண்டுமென்று வாழ்த்தி, இத்திருப்பணியில் ஈடுபட்ட அன்பர்களுக்கும், பக்தர்களுக்கும் எல்லா நலன்களும் பெருக செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

# அருள் வெளி

நீதிபதி, களம். எஸ். மகராஜன், பி. ஏ., பி. எல்,

"Time Must Have A Stop" என்ற நூலிலே ஆல்டஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) உடலுக்கும், உயிருக்கும் உள்ள உறவை, ஹிந்து சம்பிரதாயத்தையொட்டி விளக்கியிருக்கிறார். மனிதன் சாதாரணமாக இரண்டு மண்டலங்களிலே சஞ்சாரம் செய்கிறான். அவனுடைய உடம்பு பௌதிக உலகத்திலே வாழ்க்கை நடத்துகிறது. ஆனால், அந்த உடலுக்குள்ளே இருக்கும் ஆன்மா சூக்ஷ்ம உலகத்திலே சஞ்சரிக்கிறது. மேற் சொன்ன நூலிலே யூஸ்டஸ் பார்னக் (Eustace Barnack) என்ற ஓர் அருமையான பாத்திரத்தை சிருஷ்டித்திருக்கிறார் ஹக்ஸ்லி. அவன் உடம்பே பிரதானம் என்று நம்புகிறான். ஐம்புலன் மூலமாக அனுபவிக்கக்கூடிய இன்பம் ஒவ்வொன்றையும், மிச்சம், சொச்சம் வைக்காமல் அனுபவிக்கிறவன். "இன்று கிடைக்கக்கூடிய சிற்றின்பத்தை நாளை நுகரலாம் என்று வாயிதாப் போடாதே," என்பதே அவனுடைய சித்தாந்தம். விலாப்புடைக்கச் சாப்பிடுகிறான்; வெறிக்க, வெறிக்க மது மாந்துகிறான். திகட்டத் திகட்டக் கலவிக் கடலிலே மூங்கி முழுகுகிறான்; மாய்கிறான். மாய்ந்தபின் அவனுடைய ஆன்மா விண்ணுலகத்தின் ஆனந்த லகரியிலே இரண்டறக் கலக்க மறுக்கிறது. உடல்மூலம் பெறக்கூடிய சிற்றின்பத்தை, உடம்பை இழந்தபின், பெற முடியாமல் அவன் ஆன்மா வாடி வதங்குகிறது. உடம்பிருக்கும்போதாவது மனிதன் செயலில் ஈடுபட்டுத் தன்னுடைய இன்னல்களையெல்லாம் மறக்கமுடிகிறது. ஆனால், உடல் கழன்று விழுந்தபிறகோ, மறதி என்ற அருமருந்து அவனுக்குக் கிட்டுகிறதில்லை. ஆசையும், அதைப் பூர்த்திபண்ண முடியவில்லையே என்ற ஏக்கமும், ஏமாற்றமுமே ஆன்மாவின் இணைபிரியாத நண்பர்களாகிவிடுகின்றன. ஆனால், ப்ருனோ ராண்டினி (Bruno Rantini) என்ற மற்றொரு பாத்திரம் இதற்கு நேர்மாறானவன். உடல் என்பது ஆன்ம வளர்ச்சிக்காக நமக்கு இறைவன் அருளிய வரப்பிரசாதம். விடுதலை யடைவதற்காக நமக்கு ஏற்பட்ட கருவி; அல்லது சாதனம். லக்ஷியத்தை மறந்து சாதனத்தையே லக்ஷியமாகக் கொள்வது மடமை என்று அவன் கருதுகிறான்.

இந்தச் சித்தாந்தத்தைத்தான் திருமூலர் பல நூற்றாண்டுகளுக்குமுன் எடுத்து விளக்கியிருக்கிறார். ஸ்வானுபவத்தால் ஏற்பட்ட அதிகாரத்தோடு விளக்கியிருக்கிறார்.

உடல், உயிரை உய்விக்க வந்த கருவி என்பது உண்மைதான். ஆனால், அது நம்மைப் படுத்திவைக்கிறபாடு இருக்கிறதே, அதிலே நாம் நம்மையும், நமது உயிரையும் மறந்து, உடல் தத்துவத்திலேயே முழுக்க, முழுக்க ஈடுபட்டுவிடுகிறோம்.

உதாரணமாக, காமம் என்ற சக்திதான் எப்படியெல்லாம் மனிதனை ஆட்டி வைக்கிறது! உடம்பை மாத்திரம் அல்ல, உணர்ச்சியையும், அறிவையுமே பேயாட்டம் ஆடச் செய்துவிடுகிறது. திருமூலர்கூட காமச்சூறாவளியிலே அகப்பட்டு முக்கறுபட்டவர்தான்.

> "வையகத்தே மடவா ரொடும்கூடி என்
> மெய்யகத்தோர் உளம் வைத்த விதிஅது."

என்று சொல்லி, அந்தப் பொல்லாத விதியைச் சுட்டிக் காட்டிப் பெருமூச்சு விடுகிறார். ஆனால், காமத்தினால் நன்மையும் ஏற்படுகிறது என்பதைத் திருமூலர் உணர்ந்தவர். காமத்தால் பிடிக்கப்பட்டவன் தன் உடம்பை மறந்து மற்றொரு உடம்பை நினைத்து நினைத்தாவது உருகுகிறான். அந்த மட்டுக்கும் தன் உடம்பின் பிரதானம் கரைந்து குறைகிறது. ஈரேழு உலகங்களும், சந்திர சூரியர்களும், ஏன், பிரபஞ்சம் முழுவதுமே, தன்னைச் சுற்றி இயங்குவதாக நம்பினான் இராவணன். ஆனால், ஜானகியிடத்தில் அவனுக்கு ஏற்பட்ட காமம், அவனது ஆணவத்தைச் சிதறடித்து, தெம்பை அடக்கி ஒடுக்கி, பத்துத் தலைகளோடும் அவள் கால் மாட்டிலே விழுந்து பணியும்படி செய்யவில்லையா? ஆகவே, இந்தப் புலால் தருத்தியே பிரபஞ்சம் என்று கருதுகிறவனைக்கூட, அதற்குப் புறம்பாயிருக்கும் பொருள்களிடத்திலேயும் ஈடுபடும்படி செய்துவிடுகிறது காமம். சிற்றின்ப அனுபவத்திலே சிறிது நேரமாவது மனிதன் காலம், தூரம் என்ற உணர்ச்சிகளற்று அகண்டாகாரத்தில் அமிழ்ந்துவிடுகிறான்.

> "புணர்ச்சியுள் ஆயிழைபால் நட்புப்போல்
> உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார்"

என்று காமுகனையும் யோகியையும் சமநிலையில் வைத்துப் பாராட்டுகிறார் திருமூலர்.

காமரஸத்தை அனுபவிப்பவர்கள், கட்குடியர்களைப் போல, கேவலம் பழக்கத்துக்கு அடிமையாகிவிட்டால் கேடு விளைவது நிச்சயம். பழக்கத்தின் கொடுங்கோன்மையிருக்கிறதே, அது உடலோடு நின்றுவிடுவதில்லை. மனசையும், ஆவியையுமே விலங்கிட்டுச் சீரழிக்கிறது. காமத்தால் கிடைப்பது துன்பமாக

இருந்தாலும், பழக்கத்தை உதறித் தள்ளமாட்டாமல், மனிதன் அதில் ஈடுபடுகிறான்.

"ஆத்த மனையாள் அகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்(கு) இடருற்ற வாறே."

கைமேலிருக்கும் பலாவின் கனியை அனுபவிக்கும் திறமையை இழந்துவிட்டு, ஈச்சம் பழத்தை நினைத்து, நினைத்து ஸ்வப்னாவஸ்தையிலிருப்பார்கள். ஈச்சம் பழமேன்? வேப்பங் காயை நினைத்துக்கூட அங்கலாய்ப்பார்கள். பழக்கத்தின் கொடுமை இது. இப்பேர்ப்பட்ட பழக்கத்துக்கு இளக்காரம் கொடுத்துவிட்டாலோ அது சைத்தானைப் போல, நம்மை விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்ளுகிறது. பிரபஞ்சம் முழுவதும் நமது உயிருக்குச் சொந்தம் என்ற அகண்ட உணர்வு மாறி, அது வேறு, நாம் வேறு என்ற வேற்றுமைப் புத்தி வலுப் பெறுகிறது.

ஆனால், காமத்தினால் விளைவதெல்லாம் துன்பம் என்று ஒப்பாரி வைப்பதும் தவறு. அதற்கு அழிக்கும் சக்தி எவ்வளவு இருக்கிறதோ, அவ்வளவு ஆக்கும் சக்தியுமிருக்கிறது. காமத்தின் உதவியால்தான் மனிதன் காதல் உலகத்தை அடைய முடிகிறது.

"நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறும் குரிசிற்கும் அன்ன தேயாம்."

காதலால் ஏற்படுகிற ஆயிரம் நயனத்தையும், ஆயிரம் இதயத்தையும் வைத்துக்கொண்டு உலகத்தை உணர்ச்சிப் பெருக்குடன் பார்க்கும்போது, நம்முடைய எண் சாண் உடம்பு வெடிபட்டு, விட்டு வாங்குகிறது; உள்ளே சிறைப்பட்டது போலிருந்த "செங்கட்சீயம்" விஸ்வரூபக் காட்சியளிக்கிறது. இரண்யனுடைய காமத்துக்கும், இராவணனுடை காமத்துக்கும் அடிப் படையான பேதமொன்றுண்டு. காமானுபவத்தில்கூட இரண்யன் தன்னுடைய ஆணவத்தை மறக்க இயலாதவனாயிருந்தான். தன்னுடைய வீரத்திலும், வாள்வலியிலும் அவனுக்கிருந்த இறுமாப்பு, அவனது ஆன்ம வளர்ச்சிக்குப் பெரிய இடையூறாக இருந்தது.

"வாளினைத் தொழுதல் அல்லால் வணங்குதல், மகளிர் ஊடல்
நாளினும் உளவோ, என்னா அண்டங்கள் நடுங்க நக்கான்."

"மகளிரோடு ஊடும் காலத்தில்கூட நான் அவர்களை வணங்கிய தில்லையே. இந்த அரியையா வணங்கச் சொல்லுகிறாய்!" என்று பிரஹலாதனைப் பார்த்து நகைக்கிறான். ஆனால், இராவணனுடைய மனமோ, காதலால் பண்பட்டது. தன்னை மறந்த லயத்தில் அவனை அழுத்திவிட்டது காதல். ஆகவே, காதல் மூலம் அவன் உடலை மறந்து, தன்னை மறந்து, பேத நிலையற்று, பூரணத்தோடு ஐக்கியமடைந்தான், சூர்ப்பணகையைப் போல. காமத்துக்கு இரண்டு வித சக்தியுமிருக்கிறது. அதன்

உதவியால் மனிதன் உடலை மறந்து, உயிரை வளர்க்கலாம்; உயிரை மறந்து, உடலையும் வளர்க்கலாம்.

காமத்தைக்காட்டிலும் கொடியது கோபம். அது எப்பொழுதுமே நமக்கும், மற்றவர்களுக்கும் இடையே பேதம் கற்பித்து, விரோத பாவத்தை மூட்டி, ஐக்கிய புத்தியை, பிரம பாவனையைக் கெடுக்கிறது; மனசைக் கல்லாக்கி, மருளை ஊட்டு கிறது. ஆகவேதான், திருமூலர் வெகுளியை அறவே வெல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

"வெல்லு மளவில் விடுமின் வெகுளியை
செல்லு மளவும் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளொடு தூங்கினால்,
கல்லும் பிளந்து கடுவெளி யாமே"

என்று பாடுகிறார்.

காமத்தையும், கோபத்தையும்விடக் கொடுமை வாய்ந்தது லோபம். காமமும் கோபமும் உடலில் ஏற்படுகிற சேஷ்டைகள். பசி ஏற்படும் போது, உணவு அருந்தினால், பசி நீங்கிவிடும்; பசியால் ஏற்படுகிற மனக்குழப்பமும் நீங்கிவிடும். காமத்தையும், கோபத்தையும் அவ்வாறே தீர்த்துக்கொள்ளலாம். ஆனால், பண ஆசை என்பதைத் திருப்தி செய்வது கஷ்டசாத்தியமான காரியம். ஏனென்றால், அது உடம்பைப் பொறுத்ததல்ல, மனசிலேயே வேரூன்றி வளர்வது; திருப்தி செய்ய முடியாதது. ஆகவே, அது இடைவிடாமல் மனிதனுடைய நடத்தையைப் பாதித்துக் கொண்டேயிருக்கிறது. அன்பையும், இரக்கத்தையும் அது கொல்லுகிறது; பயன் தெரியாத மிருக வாழ்க்கையை வளர்க் கிறது; திருமூலரின் கோபத்துக்கு இலக்காகிறது.

"வட்டி கொண்டீட்டியே, மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயனறியாரே."

என்று அவர்களைச் சபிக்கிறார் திருமூலர்.

ஆகவே, காமக் குரோத லோபங்களை அடக்காவிட்டால் மனிதமனம் மெய்ப்பொருளோடு ஐக்கியம் பெற முடியாமல் விகற்பமடைந்து, அல்லலுறுகிறது.

விண்ணுலக யாத்திரையிலே வளர்ச்சியுற்றுத் தடைப்பட்டு நின்றது உயிர். உடல்மூலம் கர்மங்கள் செய்து, கர்மங்கள் மூலம் அனுபவம் பெற்று, அனுபவத்தின் மூலம் ஆன்ம வளர்ச்சியடைய வேண்டும் என்று ஓர் அற்புதமான உடலைக் கொடுத்தான் இறைவன். ஆனால், உடல் என்ன செய்கிறது? தன்னகத்தே வந்தடைந்த உயிரை ஏமாற்றி, காமக் குரோத லோபங்களின் உதவியால், "உயிரைக் காட்டிலும் உடலே பிரதானம்" என்ற மயக்கத்தை ஊட்டி விடுகிறது. "இன்று கிட்டுகிற சிற்றின் பத்தை நாளைக்கென்று வாயிதாப் போடாதே," என்ற பல்லவியை யூஸ்டஸ் பார்னக்கோடு நாமும் சேர்ந்து பாடுகிறோம்.

# "தாயிற் சிறந்த தயா"*

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந.ரா. முருகவேள், M. A., M. O. L.,

## முன்னுரை :

தாயின் சிறப்பைப் போற்றாதவர் எவரும் தரணியில் இல்லை. ஆத்திகர் நாத்திகர் அனைவருமே தாயின் மாண்பினைத் தகுதியுறப் புகழ்ந்து போற்றி மகிழ்வர். விஞ்ஞானிகளாயினும், மெய்ஞ்ஞானிகளாயினும் அனைவரும் தாய் வயிற்றிற் பிறந்து, தாயிடைல் வளர்க்கப்பெற்றவர்களேயாவர் தாயின் தன்னிகர் இல்லாத தனிப்பெருஞ் சிறப்புக்குக் காரணம், அவள் நமக்குப் பாலூட்டித் தாலாட்டி, நம்மைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கின்றாள் என்பதேயாகும். தாயின் அன்பிற்குச் சமமாகக் கூறத்தக்கது இவ்வுலகிற் பிறிதெதுவும் இல்லை.

## இறையருட்டிறன் :

தாயின் சிறப்பே இங்ஙனம் இணையற்றதெனின், அத்தாய் நம்பாற் காட்டும் பரிவுணர்ச்சியை அவளுக்குத் தோற்றுவித்தும், அவள் நமக்கு ஊட்டும் பாலை, அவளது உடலிற் சுரந்து பெருகச்செய்தும், அருள்புரிகின்ற இறைவனின் பெருமைக்கும், கருணைக்கும் ஓர் அளவுண்டோ? தாய்மைப் பேறும், தாய்மையுணர்ச்சியும், இறைவனின் இன்னருட் கொடையே யாகும். இறைவனின் இன்னருள் துணைபுரியாக்கால், ஒரு பெண் தாய்மைப்பேறு பெறுதலும், தாய்மைப் பரிவுணர்ச்சி எய்துதலும் இல்லை. உலகில் வாழ்மக்கள் அனைவரும், நாடு மொழி சமயம் இனம் நிறம் கொள்கை பழக்கவழக்கம் பண்பாடு நாகரிகம் முதலிய, எத்தனையோ பல துறைகளில் வேறுபட்டுக்கிடப்பினும்,

---

* சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்றுவரும் திருவாசக வகுப்பில் நிகழ்த்திய விளக்கங்களைத் தொகுத்து எழுதியது.

தாய்மைப் பரிவுணர்ச்சி என்பது, எஞ்ஞான்றும், யாண்டும் ஒரே வகை இயல்பினதாகப் பரவி விரவித் திகழ்தலைக் காண்கின்றோம்! இஃது இயற்கையமைப்பின் சிறப்பும், இறைவனின் இன்னருட்டிறனுமேயாகும்.

**வியத்தகு செய்தி :**

தாயின் சிவந்த நிற இரத்தம், வெண்மை நிறம் அமைந்த பாலாக, எங்ஙனம் மாற்றம் எய்துகின்றது? 400 அவுன்சு இரத்தம் பரவுதலாலேயே, ஓர் அவுன்சு தாய்ப்பால் சுரக்கப் பெறுகின்றது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். தாயின் இரத்தமே பாலாக மாறினாலும், இரத்தத்திலும், தாய்ப்பாலிலும் உள்ள சத்துப் பொருள்கள் வெவ்வேறு நிறத்தனவாக, தரத்தனவாக மாறுபடுகின்றன. இத்தகைய மாற்றம் எற்றுக்கு நிகழ்கின்றது? எங்ஙனம் நிகழ்கின்றது? விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு எட்டாத வியத்தகு செய்திகளாக அன்றோ இவையனைத்தும் விளங்குகின்றன! ‡

**மூல காரணன் :**

நமக்குப் பாலூட்டி, நம்மை அன்புடன் வளர்க்கும் தாய், சாலவும் உயர்ந்தவள், சிறந்தவள் என்பது உண்மையாயின், அத்தாய்க்குப் பரிவுணர்ச்சியைத் தோற்றுவித்தும், அவளிடம் பால் பெருகிச் சுரக்குமாறும் செய்வதுடன், அதனைப் பருகுமிடம்,

---

‡ "The exact means by which the breast produces milk remains one of the Mysteries of Science. There is but one raw material it could draw on - blood - and the conversion of blood into milk is a stupendous chemical achievement.

Estimates indicate that 400 ounces of blood must circulate through breasts to make a single ounce of milk. Components of blood are totally unlike those of milk.

The milk that breasts produce is misraculous; chemists have never been able to duplicate it. It is exactly tailored to meet the needs of the infant, whatever the species."

— Family Doctor,
The British Medical Association.

பருகுமுறை இதுவெனவும் அறிவிலாச் சிறு குழவிக்கு இயல்பாக அறிவித்தருள்கின்ற மூல காரணன் ஆகிய இறைவனின் பெருங் கருணைப் பெற்றிக்கு ஓர் எல்லையும் உண்டோ? அதுபற்றியே மணிவாசகர் இறைவனின் கருணைத் திறத்தினை எண்ணி எண்ணி வியந்து, ஆங்காங்கே பின் வருமாறு புகழ்ந்து பாடியருள்கின்றார்.

"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" — சிவபு. 64.

"தாயே யாகி வளர்த்தனை போற்றி" — போற்றி. 87.

"தாயிலாகிய இன்னருள் புரிந்த தலைவன்" — சதகம். 43.

"தாயான தத்துவனை" — அம்மானை. 7.

"தாயிற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணை"
— தெள்ளேணம். 10.

"தாயான ஈசன்" — தெள்ளேணம். 12.

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்பரிந்து"
— பிடித்த. 9.

"தாயாய் முலையைத் தருவானே" — ஆனந்த. 5.

**தாயும் மனம் திரியும் :**

இங்ஙனம் திருவாசகத்தின்கண் வரும் தொடர்கள் பலவும், தாயின் சிறப்பினை விதந்து கூறி, அத்தாயினும் மேலாகச் சிறந்தவன் 'இறைவன் என்று விளக்கி நிற்றல் காணலாம். இத்தகைய தாயும்கூட, ஒரோவழித் தன் சேய்கள்பால் மனம் திரிந்து வெறுத்து வேறுபடும் நிலைகள் உண்டு.'

"பிறப்பு ஓர்அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்"

எனவரும் புறநானூற்று வரிகள் தாயின் மனமும் திரிந்து மாறிவிடும் தன்மையதாதலைப் புலப்படுத்துகின்றன.

**தாயிற் சிறந்த தயா :**

இதுபற்றியே திருவாசகத்தை ஓதி ஓதித் தெய்விகநிலை எய்திய இராமலிங்க அடிகளார், "தாயிற் சிறந்த தயாவான

தத்துவன்" எனத் திருவாசகம் போற்றும் சிவபிரானின் திருவருட் சிறப்பினை வியந்து,

"பெற்றிடுதாய் போல்வது நின் பெற்றி என்பேன்; பிள்ளையது
மற்றழுதாற் கேட்டும் வராதாங்கே — சற்றிருக்கப்
பெற்றாள் பொறுப்பள்; பிரான் நீ பொறுக்கினும்நின்
பொற்றாள் பொருளெம் புலம்பு." (1)

"நற்றாயும் பிழை குறிக்கக் கண்டோம்; இந்த
நானிலத்தே மற்றவர்யார் நாடார்? வீணே
பற்றாயும் அவர்தமை நாம் பற்றோம்; பற்றற்
பற்றாத பற்றுடையார் பற்றியுள்ளே
உற்றாயும் சிவபெருமான் கருணை ஒன்றே
உறுபிழைகள் எத்துணையும் பொறுப்பது என்றுன்
பொற்றாளை விரும்பியது மன்றுள் ஆடும்
பொருளே என் பிழையனைத்தும் பொறுக்க என்றே." (2)

"தன்போலும் தாய்தந்தை ஆயிரம்பேர்
இருந்தாலும். அந்தோ
நின்போலும் அன்புடையார் யார்? எனக்கு
இந்த நீள்நிலத்தே." (3)

என்பன போன்ற பல பாடல்களால், பெரிதும் போற்றித் துதித்து மகிழ்கின்றார்! இத்தகைய பாடல்கள் பலவும் நம்மனோர் சிந்தித்து உணர்ந்து இன்புறத்தக்கனவாகும்.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

"We were indeed lucky to have dharsan of this temple. The temple is kept very clean and the entire atmosphere is charged with devotion."

(Sd) x x x

Engineers, Cauvery Development Works
Circle, Mayuram.

14—9—74

# அப்பரடிகளின் அருஞ்சொற்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், செஞ்சொற்கொண்டல்,
டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ., பிஎச்.டி.

0 1 : கவிதை சொற்களால் ஆகிறது. சொற்கள் கவிஞன் எடுத்தாளும்போது பெருஞ்சிறப்பைப் பெற்றுவிடுகின்றன. எல்லோர்க்கும் தெரிந்த சொற்களை சிற்சில வேளைகளில் கவிஞனின் கைவண்ணத்தால் புதுப்பொருளும் பொலிவும் பெற்று ஒளிவிடுகின்ற அற்புதத்தை இலக்கியங்களிற்காணலாம். சொல் ஒரு கருவிதான்; ஆயினும் அந்தக் கருவியை வைத்துக் கொண்டு அதனைக் கையாளவல்லவனாகிய கவிஞன் எவ்வளவோ புதிய படைப்புக்களைச் செய்கின்றான். புதிய உலகிற்கு நம்மை அழைத்துச் செல்லுகின்றான். அதுவே அவன் படைக்கும் பொருள் உலகம். உயர்ந்த கவிஞர்களுடைய கவிதைகளுக்கே இந்தச் மாண்பு இயல்பாகின்றது. அப்பர் என்ற அருட்பெருங் கவிஞரின் சொல் வன்மையினை எண்ணுங்கால் இந்த நினைவுகள் அனைத்தும் நம் எண்ணத்தில் எழுகின்றன.

“ இலக்கியம் என்பது வாழ்வின் ஒருவகை விளக்கமே; அது சொல்லின் வழியாக இனிது விளங்குகின்றது” என்பர். 1 அத்துடன் ஓர் ஆசிரியனின் நடையினை ஆழ்ந்து உணர்தற்கு அவனுடைய சொல்லாட்சியினை அறிதல் பெரிதும் வேண்டத் தக்கது என்பது இலக்கிய ஆராய்ச்சியாளரது முடிவும் ஆகும். “ இலக்கியம் விளக்கும் இனிய உணர்வுகள் ஒரு மனத்தினின்றும் பிறிதொரு மனத்திற்குச் சொற்கள் வழியாகவே செல்லுதலால் அவற்றைத் தனித்து ஆராயும் ஆராய்ச்சி நடை ஆராய்ச்சியின் இன்றியமையாத பகுதிகளுள் ஒன்றும்” என்பர் எடித் ரிக்கர் என்னும் அறிஞர். 2

---

1 "Literature is the interpretation of life through the medium of words" — New Methods for the Study of Literature - Edith RICKER - 1935 - P. 2.

2 " As words are the only Symbols by which literature is Conveyed from one mind to another, the Study of them is an important part of the analysis of Style. " — Ibid - P. 73.

0.2: இத்தகு சிறப்புடைய சொல்ஆராய்ச்சி சில இன்றியமையாக் கூறுகளை உடையது. சொல்லின் அளவு (Word Proportion) சொல்லின் நிலை (Word length) சொற்கள் தொடர்ந்து நிற்கும் தொடர்நிலை, (Associational Values of Words) சொற்கோவைப் பரப்பு, (Extent of Vocabulary) தொடராக்கம் (Phrasing) ஆகிய கூறுகள் இதன்பால் அடங்குவன. கவிஞனது சொற்கோவைப் பரப்பில் நம் சிந்தனையைத் தூண்டும் நிலைகளாக பலவற்றைக் கொள்ளலாம். அவற்றைக் கூர்ந்து நோக்குங்கால், அருஞ்சொற்கள் (Rare Words) அரும் பொருள்களிற் கையாளப்பெற்ற சொற்கள் (Words used in rare Senses). படைக்கப்பட்ட சொற்கள் (Coined Words), இணையற்ற பொருளில் ஆளப்பட்ட சொற்கள் (Words used in a unique Sense) அயல்மொழிகளினின்று கடன் வாங்கப் பெற்ற சொற்கள் (Words borrowed from foreign languages), இலக்கியங்களில் முன்னர்க் கையாளப்பெறாத குறுமொழி இனஞ் சார்ந்த சொற்கள் (Stang and other Words not before used in literature), வட்டாரச் சொற்கள் (dialect words and forms) ஆகிய பாகுபாடுகள் தெளியப்பெறும். 3

1.1: அப்பர் தேவாரத்திற்கமைந்த சொற்கோவையினை ஆழ்ந்து நோக்கினால் இப்பாகுபாடுகளுள் முதலாவதாகிய 'அருஞ் சொற்கள்' பலவற்றை அங்குக் காணலாம். இலக்கியங்களிற் பயில வழங்கப்பெறாத அச்சொற்களை அப்பரடிகள் கையாண்டுள்ள திறம் பெரிதும் உணரத்தக்கது. 'தமிழ் மொழித் தலைவர்' என்றும், 'கோதின் மொழிக் கொற்றவனார்' என்றும் சேக்கிழாராற் பாராட்டப்பட்டவர் அடிகள். 4 ஆதலின் அவருடைய சொல்லாட்சியும் திறனும் அறிஞர் உலகினுற் பாராட்டப்பெற்ற பழமைச் சிறப்புடையவை என்பது வெளிப்படை.

1.2: 'அல்லகண்டம்' என்ற ஒரு சொல் அப்பர் தேவாரத்திற் காணப்பெறுகின்றது. இச்சொல் வடிவம் தமிழ் உலகிற் புதியதாகக் கருதப்பெறும் நலம் உடையது. 'துன்பம்' என்ற பொருளை உடையது இச்சொல்.

"அத்தாஉன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய்கேனே" 5

---

3 Ibid - P. 90.

4 திருத்தொண்டர் புராணம் - பா. 250, பா. 2799.

5 திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப் பதிகங்கள் - சைவ சித்தாந்த மகா சமாசம் - மூன்றுவது பதிப்பு-1941-பா. 2705-2714.

இதனுள் வரும் 'கொண்டு' என்பது மூன்றும் வேற்றுமை ஆன் உருபின் பொருள்படுவதோர் இடைச்சொல் ஆகும். ஆகவே, 'துன்பத்தால் வருந்துதல் என்செய்யக் கடவேன், ஒன்றுமில்லை' என்பதும், 'அவை என்னை ஒன்றும் செய்யா' என்பதும். இத் தொடர்க்கருத்தாகக் கொள்ளப்படும். இச் சொல் அல்லல் — கண்டம் என்பதன் ஆக்கமாகக்கொள்ள இடம் உள்ளது. 'கண்டம்' என்பது இப்போதும் துன்பத்தையே குறிப்பதாகும். அல்லலாகிய கண்டம் என்று கொள்ளலாம் 'அல்' இருள் எனக்கொண்டு. 'இருளனைய துன்பம்' என்றும் பொருள் கொள்ள இடம் உண்டு. எவ்வாறேனும் அரிய சொல் வடிவம் ஆகிய இது அப்பர் தேவாரத்தில் விளங்குவது அறிந்துணரத் தக்கது.

1. 3: 'ஒப்பாரி' என்பது ஒப்புப் பொருளில் வரும் ஒரு சொல். இது திருவள்ளுவரால், தம் கயமை அதிகாரத்தில் பின்வருமாறு எடுத்தாளப்பெற்றுள்ளது. 6

" மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம் கண்ட தில் "

'அவர் அன்ன ஒப்பாரி' என்பதற்குப் பரிமேலழகர், 'அவர் மக்களை யொத்தார் போன்ற ஒப்பு' என்றெழுதுவதால், 'ஒப்பாரி' என்ற சொல் 'ஒப்பு' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளதென்றே அவ்வுரையாசிரியர் கருதுகின்றார் என்று கூறலாம்.

" கடவுளைக் கடலுள்ளெழு நஞ்சுண்ட
உடலுளானை ஒப்பாரி இலாதவெம்
அடலுளானை அரத்துறை மேவிய
சுடருளானைக் கண்டீர் நாம் தொழுவதே "

என்ற இடத்து அப்பர் அடிகள் 'ஒப்பாரி' என்ற சொல்லை ஒப்புப்பொருளில் (Resembleness) எடுத்தாண்டுள்ளார். 7 'இறைவனுடைய பெருவீரத்திற்கு ஒப்பு இல்லை' என்பது கருத்து. திருவள்ளுவராற் கையாளப்பெற்ற இச்சொல்

---

6 திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் - எட்டாவது பதிப்பு - 1951 - குறள் 1071 உரை.

7 மேற்படி - தேவாரப் பதிகங்கள் - பா. 1092.

பன்னூறாண்டுகட்குப் பிறகு, பழுத்த தமிழ்ப் புலவராகிய அப்பராற் கையாளப் பெற்றுப் புது வாழ்வு பெறுகிறது.

1. 4: 'சிவன்' என்ற சொல் சிவபிரானைக் குறிக்கும் சொல் ஆகும்; இதனை 'Siva' என்ற வடசொல்லாக்கமாகக் கருதுவார் உளரேனும், அப்பர் இதனை அருந்தமிழ்ச்சொல்லாகவே கொண்டு பாடியுள்ளார். 'சிவ(த்தல்)' என்ற வினையடியாகப் பிறந்த சொல்லாகவே இது கொள்ளப்பட்டுள்ளது.

"சிவன் எனும் நாமம் தனக்கே உடைய
செம்மேனி எம்மான்"

என்ற இடம் இக்கருத்தை இனிது விளக்குவதாக அமைந்துள்ளது. 8 'சிவன்' என்ற சொல் 66 இடங்களிலும், 'ஆர்' விகுதியுடன் சேர்த்து 5 இடங்களிலும் அடிகளால் ஆளப்பட்டுள்ளன. 'சிவந்தான்' என்றும் ஓரிடத்துச் சிவனைக் குறிப்பிட்டுள்ளார். 9 சடையினைச் 'செஞ்சடை' என்றும், 'தீ வணத்த செஞ்சடை' என்றும், கூறி மகிழ்வதுடன், 'சுடர்' என்றும், 'சோதி' என்றும் 'செம்பொன் சோதி' என்றும் கூறுவர் அடிகள். 10 எண்ணற்ற இடங்களில் பேரொளிப் பிழம்பாக உள்ள பெருமானைப் போற்றியுள்ளார். சிவ பரம்பொருளின் செவ்வொளிக் காட்சி அநுபவம் உடைய அடிகள், இச் சொல்லை இவ்வாறேகொண்டு உணர்த்தியுள்ளார் என்பது அறியத்தக்கது.

1. 5: பன்மை விகுதிகளாகத் தொல்காப்பியர் உரைத்த பலவற்றுள் ஒன்று 'கள்' என்பது. இதனைத் தொல்காப்பியர்,

"கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி உடைய பலவறிசொற்கே"

---

8 மேற்படி - பா. 1058

9 ,, - பா. 72, 84, 135, 554, 566, 638, 948, 1058, 2063, 2356, 2946, 3056 முதலியன. 1149, 1563, 2370; 2621, 2483 முதலியன.

10 ,, 121-2, 163-8, 160-6 முதலியன.

என்பர்; 11 அஃறிணை இயற்பெயர்களின் பன்மைக் குறிப்பு அவற்றொடு சேர்க்கப்பெறும் 'கள்' விகுதியான் விளங்கும் என்பது கருத்து.

"ஆர்கள் ஆகிலும் ஆக"

"இருபதுகள் தோள்"

"செய்வனகள் செய்யக் கண்டு"

"திருவருள்கள்"

"நீங்கள்", "நீர்கள்"

"பிழைத்தனகள்", "எழுமின்கள்", "பிதற்றுமின்கள்"

என்பன அடிகளார் பாக்களிற் காணப்பெறும் தொடர்கள். 12 'ஆர்' என்னும் வினைவினைக் குறிப்புடன் கள் விகுதி சேர்த்தலும், எண்ணுப்பெயர்களுடன் சேர்த்தலும், அஃறிணை வினைமுற்றுடன் சேர்த்தலும், முன்னிலைப் பன்மைப் பெயர்களுடன் சேர்த்தலும் (நீ-ர்-கள்) வியங்கோள் முற்றுக்களுடன் சேர்த்தலும் இவருடைய பாடல்களிற் காணப்பெறுதலைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். 'விகுதிமேல் விகுதி' என்று இவற்றைக் கூறல் பொருந்தும்.

முன்னிலை இடப்பெயர்களில், நீ - நின்னை என்ற வடிவங்களும் உன்னை, நுன்னை என்ற வடிவங்களும் இவர் தேவாரப் பதிகங்களிற் காணப்பெறுகின்றன 13 இலக்கியங்களில் அரிதாகக் காணப்பெறும் சொல்வழக்குக்கள் இவர் பாக்களிற் காணப்பெறுகின்றமை அறிந்திடத்தக்கது.

(தொடரும்)

---

11 தொல்காப்பியம் மூலம் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் - முதற் பதிப்பு - 1943 - சொல் - 654.

12 மேற்படி - தேவாரப் பதிகங்கள். பா. 1975, 313, 2555, 450, 574, 3022, 1245, 413.

13 மேற்படி - தேவாரப் பதிகங்கள். பா. 82, 589, 1303, 609, 790, 2016, 3021; 837, 990, 2072, 742.

# தங்கம் தங்கந்தான்

"செந்தமிழ்ச்செல்வர்"

**வித்துவான். திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.,**

தங்கம் ஒருநாள் பிரமதேவனுடைய சந்நிதியிலே கண்ணீர் விட்டுக்கொண்டே வந்து நின்றது. "என்ன சேதி? எங்கே வந்தாய்? அமரலோகம் முழுவதும் உன்னுடைய பொலிவுதான். அந்தப் பொன்னுலகத்திலிருந்து என்ன செய்தி சொல்ல வந்திருக்கிறாய்" என்று சிருஷ்டிகர்த்தா கேட்டார்.

"சுவாமி, நான் பொன்னுலகத்தில் இருப்பவன் அல்ல; மண்ணுலகத்தில் - வியவஸ்தை கெட்ட பூவுலகத்தில் இருப்பவன். என்னை எதற்காகப் படைக்கவேண்டுமென்று கேட்டு முறையிட்டுக்கொள்ள வந்திருக்கிறேன்" என்றது பொன்.

பிரமதேவர் திடுக்கிட்டார்; "இதென்ன ஆச்சரியமாக இருக்கிறதே! பொன்னுலகத்தைக் காட்டினும் மண்ணுலகத்தில் தானே உனக்கு மகிமை அதிகம்? நாங்கள் மூன்று மூர்த்திகள் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் செய்கிறோமென்று புராணங்களில் எழுதி வைத்துப் படித்துக்கொண்டிருக்கிறார்கள், உலக மக்கள். உண்மையில் நீயும் உன் கூட்டாளிகளான மண்ணும் பெண்ணுமாகிய மூவர்களுமே உலகை இயக்கும் திருமூர்த்திகள்" என்றார்.

"போதும் சுவாமி, பரிகாசம்! என் குறைக்குச் செவி சாய்த்தருளத் திருவுள்ளம் உண்டானால் விண்ணப்பித்துக் கொள்கிறேன். இல்லாவிட்டால் பேசாமல் வந்தவழியே திரும்பி விடுகிறேன்."

"என்ன விஷயமென்று சொல்லாமலே சிணுங்குகிறாயே!"

"சொல்கிறேன்; சற்றுப் பொறுமையாகக் கேட்டருள வேண்டுகிறேன். பூலோகத்தில் என் மானமே போய்விட்டது. இனிமேல் அங்கே உயிர் வாழ்வதென்பது நடவாத காரியம். நான் படும் அவஸ்தை போதும் சுவாமி, போதும்!"

நான்முகனர் எட்டுக் காதுகளையும் நெளித்துக்கொண்டார்.

" நான் சொல்வதில் சிறிதும் மிகை இல்லை, நான் படும் பாடு சொல்லத்தரமன்று."

" தட்டான் உன்னைச் சரியாக வைத்துக்கொள்ள வில்லையோ ? "

" அவன் என்னைப் படுத்தும் பாட்டைத்தான் இங்கே முறை யிட வந்திருக்கிறேனே. "

' என்ன செய்கிருன் ? உன்னைத் தழலில் உருக்குகிருனே ; அது உனக்குப் பொறுக்கவில்லையா ? உன்னிடத்திலுள்ள மாசு மறுக்களெல்லாம் போகத்தானே அப்படிச் செய்கிருன் ? "

" பகவானே, அது வாஸ்தவந்தான். தட்டான் என்னை உருக்கட்டும். நான் பக்திமானது உள்ளம்போல உருகி உருகிச் சுத்தமாகிறேன். அக்கினிப்பிரவேசத்தினுல் என் உடம்பு தூய்மை பெறுகிறதென்பதை மறக்கமாட்டேன். வாழ்க்கையில் விரதத் தழலிலே உடலை ஒறுக்கும் தவத்தினரின் நிலை அது வென்று பெருமிதயாக இருக்கிறேன். "

" அப்படியானுல் தட்டான் பட்டடைக் கல்லில் வைத்து அடிக்கிருனே, அது உனக்கு வெறுப்பாக இருக்கிறதா ? "

" அதையும் நான் வெறுக்கவில்லை. எனக்குப் புதிய உருவம் கொடுக்க அந்தக்காரியம் எவ்வளவு உபயோகமாக இருக்கிறது! பெரிய சுத்தியால் அடிக்கிருன் ; சிறு சுத்தியால் மெல்ல மெல்லத் தட்டுகிருன். ஒரு பக்கமாக நறுக்கித் தேய்த்துத் தட்டையாக அடிக்கிருன். எல்லாவற்றையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள் கிறேன். கல்லோடும் மண்ணேடும் கலந்து என்னைப் படைத்து நிலமகளின் வயிற்றிலே தாங்கள் வைத்துவிட்டீர்கள். எனக்குத் செவிலித் தாயைப்போல வாய்த்திருக்கிருன் தட்டான். அடித்து அழுதூட்டிக் குழந்தையின் மேனி வளர்ச்சிக்கு அடியிடும் தாயைப்போல அவன் என்னைத் தட்டுகிருன் ; அடிக்கிருன். அதில் பிழை என்ன, சுவாமி ? "

" அப்படியானுல் உன்னைக் கம்பியாகத் திரட்டிப் பெரிய துவாரத்திலிருந்து சிறிய துவாரம் வரைக்கும் புகும்படி செலுத்து கிருனே, அது பிடிக்கவில்லையா ? "

" ஆஹா ! அதுதான் எனக்கு உயர்ந்த கௌரவம். அவன் அப்படிச் செய்யாவிட்டால் உலகம் என்னைத் 'தங்கக் கம்பி' என்று உபமானமாகச் சொல்லுமா? உடல் கூனிக் குறுகி நுழைந்தாலும், பண்பட்ட உருவத்தில் நான் வெளிவருகிறேன். என் உடம்பில் இருந்த கடுமை போய் மென்மை வருகிறது எல்லா வித ஆபரணங்களுக்கும் இணைப்பூட்டும் உருவத்தில் நான் சர்வாந்தரியாமியாக இருக்கிறேன். ஆகையால் அது எனக்கு மிகவும் பிரியமான செய்கை ! "

" உலகத்தார் கண்டகண்ட அங்கங்களிலெல்லாம் உன்னைத் தூக்கிக்கொண்டு திரிகிருர்களே, அதில் உனக்கு விருப்பம் இல்லையா ? "

" என்ன சுவாமி, தட்டானை விட்டுவிட்டு உலக அரங்குக்கு வந்துவிட்டீர்களே ! தட்டானிடத்தில் நான் படும் அவமானத்தைத்தானே சொல்ல வந்தேன் ? "

பிரம்மாவுக்கு விஷயம் விளங்கவில்லை

" சரி, சொல்லி விடுகிறேன். என்னைப் படைத்தபோதே உலகத்தில் உயர்ந்த பொருளாகப் படைத்தீர்கள். எல்லாப் பொருளும் என்னைக் கொண்டு மனிதர்கள் அடையும்படி செய்து விட்டீர்கள். இவ்வளவு சிறப்பைப் பிறப்பிலிருந்தே நான் அடைந்திருக்கிறேன். தெய்வங்களின் திருமேனிகளை நான் அலங்கரிக்கிறேன். அவர்கள் திருவடியிலே சிலம்பாகக் கிடந்து இன்புறுகிறேன் ; திருமுடியிலே கிரீடமாகக் கவித்து யாரும் பெறுப் பேறு பெறுகிறேன். இப்படியிருந்தும் அந்தத் தட்டான் என்ன செய்கிருன், தெரியுமா ? "

சிறிது நேரம் பொன்னழகு பேசாமல் இருந்தது ; அதன் உள்ளத்திலே துக்கம் பொங்கியிருக்கவேண்டும்.

" சொல்லத் தோன்றவில்லை போதும் என் வாழ்வு! என்னை அழித்துவிடுங்கள் " என்று புலம்பத் தொடங்கியது.

" விஷயத்தைச் சொல்லாமல் பிரலாபிக்கிருயே ; கிடக்கிறது சொல் " என்று பிரமதேவர் ஆறுதலான தொனியில் கேட்டார்.

" சொல்லுகிறேன்; சொல்லிவிட்டுப்போகத்தானே வந்தேன்? மிகவும் உயர்ந்த பொருளாகிய என்னை, மகா துச்சமான குன்றிமணியை வைத்து, அந்த மகாபாபி, தட்டான் நிறுக்கிருன்.

அவன் என்னை உருக்கட்டும்; அடிக்கட்டும், அராவட்டும், கப்பி யாக்கட்டும்; சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறேன். அந்தக் குன்றிமணியோடு வைத்து என்னை நிறுக்கிறானே. அப்பொழுது தான் என் அங்கமெல்லாம் குலைகிறது; மானம் போகிறது! நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாமா என்று தோன்றுகிறது. தேவரீருடைய சிருஷ்டியிலே எனக்கு நாக்கைத்தான் படைக்க வில்லையே! படைத்த பெருமானிடத்திலே வந்து அழலாமென்று தான் வந்தேன்."

"மாற்ற முடியாத காரியம்!" என்ற இடிபோன்ற பேச்சுத் தான் பிரமதேவர் திருவாக்கிலே பிறந்தது. கதிகலங்கிப்போய்ச் சத்திய லோகத்திலிருந்து தங்கம் கீழே விழுந்தது; மண்ணின் ஆழத்திலே பதிந்துகொண்டது.

• • • •

கதைதான் இது; ஆனாலும், மிகவும் அருமையான உண்மை யொன்று இதில் அடங்கியிருக்கிறது. அறிவுக்கும் அறியாமைக் கும், இருளுக்கும் ஒளிக்குப் தனித்தனி இடங்கள் உண்டு. அந்த இடங்களிலே அவற்றை வைத்துப் பார்க்கவேண்டும். இதைச் சங்க காலத்துப் புலவர்கள் 'வரிசை யறிதல்' என்று சொல் வார்கள். அவர்களுக்கு விலையுயர்ந்த பரிசில்கள் தரவேண்டு வது அவசியமன்று. அன்புடன் உபசரித்துத் தகுதியறிந்து அந்தப் பரிசிலைத் தந்தால் அவர் உள்ளம் குளிர்ந்துவிடும்.

"தினையனைத் தாயினும் இனிது அவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே" (புறநா. 208.)

என்று ஒரு புலவர் சொல்கிறார்.

புலவர்கள், 'நம்முடைய தகுதியை அறியும் உபகாரிகள் யார் இருக்கிறார்கள்?' என்று ஆராய்ந்து தேடிச் செல்வார்கள். "வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை" என்று தம்முடைய வாழ்க்கையின் லக்ஷ்யத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

• • • •

கபிலர் என்னும் புலவர் பெருமான் வரிசை யறியும் இந்தச் சிறந்த இயல்பை ஒரு பாட்டினால் ஒரு வள்ளலுக்கு அறிவுறுத்து கிறார். மலையமான் திருமுடிக்காரி என்ற வள்ளலைப் பார்த்து, அவர் சொல்லுகிறார்; "பெரிய வண்மையையுடைய தோன்றலே, உலகத்தில் ஈகை அரிது என்று சொல்லுவார்கள்; சொல்லட்டும்

அது எளிதென்றே நான் சொல்லுகிறேன். ஒரு திசையில் இருக்கும் ஓர் உபகாரியை நோக்கி நாலு திசையிலிருந்தும் பல பல பரிசிலர் வருவர். கொடுப்பவன் இருந்தால் வாங்குபவர்களுக்கு என்ன குறை? அவர்களுக்குப் பரிசில் கொடுத்து அனுப்புவது போதுமென்று நினைத்தால் ஈதல் எளிது. ஆனால், அப்படிக் கொடுப்பது மாத்திரம் அறிவுடைமையாகாது. பொருளும் ஈகையும் உலகத்தில் பலரிடம் இருக்கின்றன. உன்னிடம் பரிசிலர்கள் வருகிறார்கள்; புலவர்கள் வருகிறார்கள். புலவர்களிடத்தில் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். அவர்களுக்கு நீ வழங்கும் பொருள் பெரிதன்று. தரமறிந்து வழங்க வேண்டும். வரிசையறிதல் பெரிதும் அரிது. எல்லோரையும் ஒரு தட்டிலே வைத்து நிறுத்துப் பார்ப்பது பெரிய பிழை. வரிசையறியும் வல்லமையுடையாயென்ற பெயர் உனக்கு வேண்டும். அசட்டு மந்திரிக்கும் தலையாட்டி, புலவனுக்கும் தலையாட்டினால் உன்னை அறிவுடையுலகம் இகழும். புலவர்கள் ஒரு பொருளாக நினைக்கமாட்டார்கள். ஆகவே, வரிசையறிய உனக்குத் தெரிந்தால் எல்லோரையும் ஒரு தரமாகப் பார்க்கும் பொதுநோக்கைத் தவிர்வாயாக!"

இந்த உபதேசம் பாடலாக வெளியாயிற்று.

ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்;
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்;
ஈதல் எளிதே; மாவண் தோன்றல்!
அதுநற் கறிந்தனை யாயின்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே. (புறநா. 121.)

[உள்ளி - நினைத்து. நற்கு - நன்கு.]

• • • •

கபிலர் கூறிய பொருள் நிரம்பிய மொழி இது. சாதியாலும் தொழிலாலும் வேற்றுமையில்லாத ஜன சமுதாயத்திலேகூட அறிவாலே வேற்றுமை இருக்கத்தான் இருக்கும். அறிவை வணங்கத் தெரியாத மனிதன் மிருகப் பிராயத்திலே இருப்பவன் தான்.

தங்கம் குறை கூறிய அதே விஷயத்தை நல்லிசைச் சான்றோராகிய கபிலர் அறிவுரையாகச் சொல்லியிருக்கிறார். வரிசை அறிதல் பெரிதும் அரிது! தங்கம் எப்போதும் தங்கந்தான். அது முதல் வரிசையில் இருக்கவேண்டியதே.

# தருமையில் இருதுர்க்கைகள்

## திரு என். இராமகிருஷ்ண

நவராத்திரி விழாவின்போது திருத்தருமை ஆதீனத்தில் துர்க்கைக்குச் சிறப்பான வழிபாடு நடைபெறும் தருமையில் இரண்டு அபூர்வமான துர்க்கையின் கோயில்கள் உள்ளன. ஒன்று ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி கோயில். மற்றொன்று ஸ்ரீ வனதுர்க்கை கோயில். இது ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் சில ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டது.

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி கோயில் 1953 இல் கட்டப் பட்டது. ஒன்பது பொற்கலசத்துடன் மயனுடைய சிற்ப இலக் கணத்தில் நவாம்சநாகர விமானம் அமைப்பாக, கோயில் கட்டப் பட்டுள்ளது. சந்நிதி கிழக்குப்பார்த்தது. இக் கோயிலுக்குத் தனி கோபுர வாயில் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளது அம்பிகை ஒரு முகமும் பதினெட்டுக் கரங்களும் அமையப்பெற்று மகிஷத்தின் தலைமீது நின்ற கோலத்தில் எழுந்தருளி இருக் கின்றாள். வலக் கைகளில் கீழிருந்து ஜபமாலை, தாமரைப்பூ, பாணம். கத்தி. வஜ்ஜிராயுகம், கதை, சக்ரம். திரிசூலம், கோடரி இவைகளும், இடக் கைகளில் மேலிருந்து சங்கம், மணி, பாசம், சத்தி தண்டம்,. கேடயம். வில். பானபாத்திரம், கமண்டலம் இவைகளும் அமையப்பெற்று இருக்கின்றாள். மகிஷத்தின்கீழே தாமரையுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அம்பிகையின் கல்சிலை களில் மிகவும் வேலைப்பாடு அமைந்ததும் அழகானதுமான சிலை ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவியின் சிலை.

ஆத்மார்த்தமாகவும், பரார்த்த நிலையிலும் தேவியை பிரதிஷ்டைசெய்து வழிபடலாம். பொதுவாக, பரார்த்த நிலையில் கோயில்களில் பிரதிஷ்டைசெய்து வழிபாடு செய்கின்றார்கள்.

பலரும் இந்த அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டும் என்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தருமபுரத்தில் இந்தத் தேவியை பிரதிஷ்டை செய்து சிறப்பாக வழிபாடுகள் முறையாகச் செய்துவருகின்றார்கள். அம்பிகையின் ஸ்ரீ சக்ரமாக மகாமேரு அமைக்கப்பட்டிருக்கிறது. நித்ய வழிபாடாக இரண்டுகால பூஜைகள் நடக்கின்றன. காலை மாலைகளில் நவராத்திரி விழாவின்போது சிறப்பு வழிபாடுகளும்

சதசண்டி ஹோமமும் நடத்தப்படுகின்றன. வேத பாராயணங்களும் திருமுறைகளும் ஓதப்படுகின்றன.

உலகக்ஷேமத்திற்காக கும்பாபிஷேகநாள் தொடங்கி, கோடி அர்ச்சனை அம்பாளுக்குச் செய்யப்பட்டுவருகின்றது இப்போது ஒன்பது கோடி முடிவுபெற்ற. பத்தாவது கோடி அர்ச்சனை நடைபெற்றுவருகின்றது. ஒவ்வொரு செவ்வாய் வெள்ளிக் கிழமைகள் இங்கு விசேடம். மற்றும் விழாக்காலங்களில் சந்தனக் காப்பு அலங்காரமும், புஷ்பாஞ்சலியும் நடைபெறும்.

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி மிகவும் சக்தி வாய்ந்தவள். 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வட நாட்டு யாத்திரை மேற்கொண்டபோதும், குறிப்பாக கைலாய யாத்திரை மேற்கொண்டபோதும் பக்கபலமாக நின்று எல்லோரையும் காத்தருள்செய்தாள் என்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளக் கேட்டுள்ளேன்.

### வனதுர்க்காதேவி :

சமீபகாலத்தில் தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களால் கட்டப்பட்ட அபூர்வமான கோயில் ஸ்ரீ வனதுர்க்காதேவி கோயில். சில ஆண்டுகளுக்குமுன் காடாகவும் மக்கள் செல்லமுடியாமலும் இருந்த இடத்தை ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் ஓர் அழகான சோலையாக மாற்றி அதன் நடுவில் வனதுாக்காதேவி கோயில் கட்டியுள்ளார்கள். வனங்களின் தேவதையான வனதுர்க்காதேவியின் கோயில் மிகவும் அபூர்வம்.

சிவனை, சிவனாகவும் சத்தியாகவும் பலமுறைகளில் வழிபடுகின்றோம். ஜீவராசிகளின் க்ஷேமத்தின் பொருட்டு ஆண்டவன் பலவிதமான ரூபங்களில் அருள் வழங்குகின்றான். காத்தலும் உண்டு; அழித்தலும் உண்டு. தீயசக்திகளை அழித்து மக்களைக் காப்பது இறைவனின் கடமை. அவருக்கு உடன் உழைப்பவள் சக்தி. சக்தியைப் பலவிதமாக அழைக்கின்றோம். மனோன்மணி, அன்னபூரணி, மகேசுவரி, நாராயணி, அபிராமி, காளி, மற்றும் துர்க்கை என்று பல தோற்றங்கள் உள்ளன. ஆயினும் துர்க்கையில் பலவிதம் உண்டு அவையாவன :- அக்னிதுர்க்கை, மகாதுர்க்கை, ஜலதுர்க்கை, பிரம்மதுர்க்கை, விஷ்ணுதுர்க்கை, ருத்ரதுர்க்கை, வனதுர்க்கை, சூலதுர்க்கை, சூலினிதுர்க்கை என்று ஒன்பதுவகை உண்டு. அவற்றுள் ஒன்றான வனதுர்க்கை இங்கு உள்ளாள்.

துர்க்கை வெற்றித்தெய்வம். தமிழ் இலக்கியங்களில் அவள் கொற்றவை என்று கூறப்படுகின்ருள். ஆகம சாத்திரங்களில் இருந்து நாம் அறிவது என்னவெனில் பரமசிவனின் சக்தி 4 பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளாள். சமாதான ரூபத்தில் பவானி என்றும், போர் அல்லது யுத்தத்தின்போது துர்க்கையாகவும், புருஷ ரூபத்தில் விஷ்ணு துர்க்கையாகவும், பயங்கர சொரூபத்தில் காளியாகவும் காணப்படுகின்ருள். நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் துர்க்கையைக் கொற்றவை என்றும் காளியைப் பழையோள் என்றும் கூறியுள்ளார். வெற்றியின் சின்னமாகக் கொற்றவை கூறப்படு கின்ருள். அக்காலத்தில் அரசர்கள் தங்கள் வெற்றிக்காகத் துர்க்கையை வழிபட்டு வந்திருக்கின்ருர்கள். பழமையான காவியங்களிலும் நூல்களிலும் துர்க்கை காடுகிழாள் என்று கூறப்படுகிருள். அவளே வனதுர்க்கை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தன்னுடைய வேதாரண்யம் கோடிக் குழகர் திருப்பதிகத்தில் வனதுர்க்கையைப்பற்றிப் பாடியுள்ளார். ஆரண்யகர் என்ற முனிவர் துர்க்கையை வழிபட்டால் எதிரிகள் மாய்வர்; வெற்றி கிடைக்கும் என்று கூறியுள்ளார். ஆதலால் வனதுர்க்கையை எல்லோரும் வழிபடலாம்.

இவைகளைத் திருவுளத்தில் கொண்டு ஸ்ரீலஸ்ரீ 25-வது குருமஹா சந்நிதானம் அவர்கள் வனதுர்க்கையின் கோயிலைச் சிறப்பாக - புதிதாக எழுப்பியுள்ளார்கள். அழகான பூங்காவில் மா, பலா, தென்னை, கரும்பு, பயிர் இவற்றின் நடுவில் அன்னை வீற்றிருக்கிருள். சுமார் 100 ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூங்கா இது.

கோவிலில் உள்ள வன துர்க்கையின் உருவம் அழகாக அமைந்துள்ளது. சிங்கத்தின் மீது எட்டுக் கைகளுடன் வீற்றிருக்கின்ருள். எல்லோரும் சென்று வழிபடலாம். வசந்த நவராத்திரியின்போது வன துர்க்கைக்கு விசேஷ வழிபாடுகள் நடைபெறும்.

"மையார்தடங் கண்ணிபங் காகங்கையாளும்
மெய்யாகத் திருந்தனள் வேறிடமில்லை
கையார்வளைக் காடுகாளோடும் - உடனுய்க்
கொய்யார்பொழிற் கோடியே கோயில்கொண்டாயே"
— திருக்கோடிக் குழகர் திருப்பதிகம்.

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியுள்ளார்.

தற்போதுள்ள 26ஆவது தருமை ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம் அவர்களும் நவராத்திரியின்போது துர்க்கைக்குச் சிறப்பாக விழா எடுக்கின்ருர்கள். இவ்வாண்டு 24ஆவது சதசண்டி வேள்வி நடைபெறு கின்றது. ஸ்ரீ மஹாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் காலை மாலை சதசண்டி வேள்வி, சுவாசினீ குமாரீ வடு பூஜை, சதுர்வேத பாராயணம், துர்க்கா சூக்த பாராயணம், திருமுறைப் பாராயணம் ஸ்ரீமகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு லக்ஷார்ச்சனை ஸ்ரீ வித்யா சக்ரமாகிய மேருவிற்கு ஸகஸ்ர நாமார்ச்சனை களும், விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் நடைபெறும். முடிவில் சப்த சதி ஹோமமும் சத சண்டி வேள்வியும் மகாபூர்ணுகுதியுடன் பூர்த்தியாகும்.

ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் 10 நாட்கள் கலை நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளும் நடைபெறும். ஸ்ரீ மஹாலக்ஷ்மி துர்க்கா தேவி சந்நிதியில் தேவி பாகவத விரிவுரையும் நடைபெறும்.

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

[ மலர் 38, இதழ் 10, பக்கம் 493இன் தொடர்ச்சி ]

பூத மானவை நித்தம் என்று
 புகன்ற தென்னை? உருக்களாய்
ஆத லோடழி வாகு மாதலின்
 ஆக்கு வோரவர் வேண்டிடும்;
காத லோடு கடாதி மண்கொ
 டியற்று வோருளர், கண்டனம்;
சீத நீரில் எழுந்த கொப்புள்
 நிகழ்ந்த மாருதச் செய்கையே. 37

## இதன் தெளிபொருள்

நிலம் முதலிய பூதங்களை, 'என்றும் ஒரு பெற்றியவாய் உள்ள பொருள்கள்' என்று நீ கூறியது எவ்வாறு பொருந்தும்? பொருந்தாது. ஏனெனில், 'அவைகளே தம்முட் கூடிப் பலவகை உடம்புகளாய்த் தோன்றும்' என்றும், 'பிரிந்து பரிணாம நிலையின் நீங்கிப் பண்டைய நிலையை எய்தும்' என்றும் நீயே கூறினை யாதலின், 'பூதங்கள் சடம்' என்பதும், 'அவற்றின் காரியமே உடம்புகள்' என்பதும் உனக்கும் உடன்பாடு. ஆகவே சடப் பொருள் காரியப் படுதல் காரியப்படுத்துவோர் இல்லாமல் இயலாது. அதனை மண் முதலிய சடப்பொருள்கள் குடம் முதலியனவாகக் காரியப்படுதல் காரியப்படுத்துவோர் இன்றி இயலாமையின் வைத்துக் கண்கூடாக அறிகின்றோம். 'நீரினின்று தாமே தோன்றுகின்ற அலை குமிழி, முதலியனபோலப் பூதங்களினின்றும் பலவகை உடம்புகள் தாமே தோன்றும்' என நீ கூறியதும் பொருந்துமா றில்லை; ஏனெனில், நீரினின்றும் அலை, குமிழி முதலியன காற்றுத் தோற்றுவிக்கவே தோன்றுவன அன்றித் தாமே தோன்றுவன அல்ல ஆகையால்.

### விளக்கம்

பூதங்களை, 'தோற்றம் நாசம் இல்லாத பொருள்கள்' என்றும், 'அவற்றினின்று உடம்புகள் தாமே தோன்றும்' என்றும் உலகாயதர் கூறுதல், 'கடவுள் உண்டு' என்பதை மறுத்தற் பொருட்டே. அதனால், அவரது கூற்றுப் பொருந்தாமையை இவ்வாறு விளக்கினர்.

இதனால், "போற்றும் இவை நித்த இயல்பாம்" எனவும், "புத்தி குணம் நற்பொறி புலன்கள் இவை யெல்லாம் இந்நீர் வரும் நீரினில் எழுங் குமிழி ஒத்தே" எனவும் முன்னர் (14, 15) அவர் கூறியவற்றை மறுத்தார்.

(5)

நீரின் வந்தெழு கொப்புள் நீரது
　　வாய்எழும்; நிகழ் பூதமும்
ஓரின் வேறுணர் வாய்எழா; அவை
　　பூத மாகி உதித்திடும்;
தேரின் நூறடை காய்செ றிந்தவை
　　சேர வேறு சிவப்பெழும்;
பாரி னிற்பிரி யாது புந்தி
　　பழிப்பு டம்பு கிடக்கவே 88

### இதன் தெளிபொருள்

'நீரினின்று குமிழி முதலியன தோன்றுதல் போல, பூதங்களினின்றும் உடம்புகள் தோன்றும்' என்று மட்டும் நீ கூறியொழியாது, 'அவ்வுடம்பில் உளதாகின்ற அறிவும் தோன்றும்' என்று நீ கூறினை. (இது பெரிதும் பேதைமைச் செயலாகும். எவ்வாறெனில், நீரினின்றும் எழுகின்ற குமிழி முதலியனவும் அந்த நீர் போலவே சடமாவனவன்றி, அறிவுடையன ஆகாமை வெளிப்படை. எனவே, நீ கூறிய உவமையினாலே சடத்தினின்றும் சடம் தோன்றுவதன்றி அறிவு தோன்றாமை பெறப்பட்டது. ஆகவே,) பூதங்களினின்றும் அவை போன்ற சடப்பொருள் தோன்றுமன்றி, அறிவு தோன்றாது என்பது முடிவாம்.

'அவ்வாறன்று, சுண்ணம்பு, வெற்றிலை, பாக்கு என்னும் மூன்றும் கூடியவழி, முன்பு இல்லாத சிவப்புத் தோன்றுதல் போலப் பூதங்கள் பலவும் ஒன்றுகூடும் பொழுது, முன்பு

இல்லாத அறிவு தோன்றும்' என நீ கூறுவையாயின், சுண்ணம்பு முதலிய மூன்றன் கூட்டத்தில் பிறந்த சிவப்பு, அம்மூன்றன் கலவையுள்ளளவும் மறையாததுபோலப் பூதங்களின் கூட்டமாகிய உடம்பு உள்ளளவும் அறிவு பிரிந்துபோகாமல் விளங்கியே இருக்க வேண்டும். (அவ்வாறின்றி உறக்கத்திலும், பிணக் கிடையிலும் அறிவு இல்லாதொழிதலால், அந்த அறிவைப் பூதக் கூட்டத்தில் உண்டானதாகக் கூறுதலும் பேதைமையேயாம்.)

## விளக்கம்

தந்துரைத்தவை இசை யெச்சங்கள். "எழும்" என்றது "பிரியாது" என்பதனோடும், "பிரியாது" என்பது "எழும்" என்றதனோடும் இயைந்து, மேற்கூறியவாறு பொருள் தந்தன. "தேரின்" என்பது, "எழும், பிரியாது" என்பவற்றோடு இயைந்து, 'நுனித்து ஆராயின் இவை விளங்கும்' எனப் பொருள் தந்தது. "ஓரின்" என்றதும் இவ்வாறே நின்றது. "நீரது, பூதமாகி" என்பவற்றில், "நீர், பூதம்" என்றவை, அவற்றின் தன்மைகளைக் குறித்தன.

நூறு-பொடிச் சுண்ணம்; அடை-வெற்றிலை; காய்-பழுக்காய்; பாக்கு - செறிந்து சேர - ஒன்றுபட்டுக் கூட.

கூறு சேர்வையின் வந்த போது
சிவப்பெ னுங்குணம் ஒன்றுமே;
வேறு வேறு புலன்கு ணங்கள்
உடற்கண் வந்து விளைந்ததென்?
நூறு காயடை கூடும் வேறொரு
வன்ற னுலென நோக்கி நீ
தேறு பூத செயற்கும் வேண்டும்
ஒருத்தன் என்று தெளிந்திடே. 39

## இதன் தெளிபொருள்

நீ கூறிய சுண்ணம்பு முதலிய மூன்றன் கலவையில் தோன்றுவது 'சிவப்பு' என்னும் நிறம் ஒன்றே. அவ்வாறாக அதனைப் பூதங்களின் சேர்க்கையாகிய உடம்பில் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றை அறிகின்ற ஐந்து புலன் அறிவுகளும், மற்றும் மனமும், சத்துவம் முதலிய குணங்களும் ஆகிய வேறுபட்ட பல பண்புகளும் தோன்றுதற்கு உவமையாகக்

கூறுதல் எங்ஙனம் பொருந்தும்? உண்மையில் அறிவு, பூதங்களின் சேர்க்கையில் தோன்றுவதாயின், ஒரே வகையாய் இருக்குமல்லது, இவ்வாறு பல்வேறு வகையாய் இருக்க மாட்டாது.

இனி 'பூதங்களின் சேர்க்கையில் அறிவாகிய உயிர் தோன்றுகின்றது' என்றல் பொருந்தாமையால், அதனை வைத்து 'உயிரையும், உடம்பையும் ஒன்று சேர்த்த இறைவன் ஒருவன் உளன் என்றல் மயக்க உரையாம்' என்று கூறுதலும் பொருந்தாதாயிற்று. அது நிற்க,

'சுண்ணம்பு முதலிய மூன்றன் சேர்க்கையில் சிவப்புத் தோன்றுதல்போலப் பூதங்களின் சேர்க்கையில் அறிவாகிய உயிர் தோன்றும்' என்றே வைத்துக்கொண்டாலும், சுண்ணம்பு முதலிய வேறு வேறு பொருள் ஒன்று சேர்வது வேறொருவனலன்றி, அவைதம்மானே ஆவதில்லை; ஆகவே பூதங்கள் ஒன்று சேர்வதும் வேறு ஒருவனால் ஆவதன்றி அவற்றானே ஆகாமை பெறப்படும். அதனால், சுண்ணம்பு முதலியவற்றின் கூட்டத்தில் சிவப்புத் தோன்றுதலை உவமையாகக் கொண்டபோதிலும் உனது கொள்கை நிலைபெற வழியில்லை.

### விளக்கம்

"ஒன்றுமே" என்பதன்பின் 'தோன்றும்' என்னும் பயனிலை எஞ்சி நின்றது. "தேறு" என்பதனை, 'செயல்' என்பதனோடு வினைத்தொகையாக இயைக்க. (7)

ஆன ஐம்பொறி, உண்டி, நித்திரை,
அச்சம், மைதுன மாதியா
ஊனின் வந்திடும் முன்பி லாதவை
என்று ரைக்கில் உலூதைபோல்
வானின் வந்திடும் மாதர், ஆண், அலி
யாகி மானுட ராதியாம்
யோனி பன்மையும் இன்று, பூதம்
உறும்பு ணர்ச்சிஓர் தன்மையே. 40

### இதன் தெளிபொருள்

ஐம்புல அறிவு முதலிய வேறுபட்ட பல குணம் செயல்களும் பூதக் கூட்டமாகிய உடம்பு ஒன்றிலே முன்பு இல்லாது

பின்பு தோன்றும் என நீ கூறினல், சிலந்தியின் வயிற்றினின்றும் வரும் நூல் ஒரு வகையாகவே இருத்தல்போல ஒரு வகையான குணமே தோன்றும்; பல வகையான குணங்கள் தோன்ற மாட்டா. மேலும், பெண், ஆண், அலி என்னும் பால்வேறு பாடுகளும், மக்கள், விலங்கு முதலிய பிறப்பு வேறுபாடுகளும் அமையமாட்டா. ஏனெனில், பூதங்களின் கூட்டம் ஒரு தன்மைத் தாவதன்றிப் பல்வேறு தன்மைத்து ஆகாமையின்.

### விளக்கம்

உலூதை – சிலந்தி. வாலின் – சிறப்பாக. (8)

ஐந்து நான்கொரு மூன்றிரண்டுடன்
ஒன்ற தாய்உட லங்களின்
வந்தி டாஉணர் விந்தி யங்களும்
வன்ன பேதமும் இன்மையாம்;
புந்தி ஓடிய வன்ன போக
குணங்கள் பூத புணர்ச்சிதான்
தந்தி டாதிவை பேத மாயிட
வந்த வாவினை தந்தவா. 41

### இதன் தெளிபொருள்

ஐந்தறி வுயிர், நாலறி வுயிர் முதலாக ஓரறி வுயிர் ஈறாக உயிர்கள் பகுக்கப்படும்படி உடம்புகளில் அறிவு நிலை வேறு படுதலாலும் பொறி புலன்களின் பன்மைகளும், நுண்மை பருமை களாகிய அறிவுப் பன்மைகளும் காணப்படுதலாலும் அறிவு 'உடம்பின் குணமாய்த் தோன்றும்' என்றல் பொருந்து மாறில்லை. மேலும் பூதங்களின் கூட்டம் ஒன்றே விருப்பு வெறுப்புக்களோடு நுகரும் நுகர்ச்சிக்கு ஏற்ற உணர்வுப் பன்மைகளைத் தரமாட்டாது. இவ்வேறுபாடெல்லாம் உயிர் களின் வினைக்கு ஏற்ப இறைவன் அமைத்தவையேயாம்.

### விளக்கம்

வன்னம் – எழுத்து; நாதம்; என்றது பிறப்பிலே காணப் படும் கூர்த்தஅறிவு மந்தஅறிவுகளை. "புந்தி ஓடிய வன்னம்" என்பதில் வன்னம் – வகை. வந்தவாறு, தந்தவாறு என்பன செய்யுட்கண் கடைக் குறைந்து நின்றன. 'இவை வந்தவாறு வினை தந்தவாறும்' என முடிக்க. (9)

அறிவு பூதம தென்னின் வேறு
புறத்த நிந்தமை கண்டிலம்;
செறிவு தான்உட லத்தெ னிற்சவ
மான போதுடல் தேருமோ?
குறிகொ ளாதுடல் வாயு வானது
கூடி டாமையின் என்னில்நீ
பிறித ராதுயிர் நிற்க ஞானம்
உறக்கம் என்பிற வாததே? 42

## இதன் தெளிபொருள்

'பூதங்கள் அறிவைத் தோற்றுவிக்கும் அறிவுத் தன்மை உடையன' எனின், அவை உடம்பாய் நில்லாது வேறு நின்ற பொழுது அத்தன்மையை எவ்விடத்தும் சிறிதும் நாம் கண்டிலோம். ஆதலின் அவை சடம் என்பதே தேற்றம்.

'அன்னதன்று அவை அறிவாதல் உடம்பாய் நிற்கும் பொழுதுதான்' என்று வாதித்தால், பிணமான பொழுது உடம்பு இருக்கவும் அதில் அறிவு நிகழாமை என்னை?

'உடம்பு பிணமான பொழுது பிராண வாயுவாகிய சிறந்ததொரு பூதம் நீங்கிவிட்டமையால் அறிவு நிகழ்தல் ஒழிந்தது' என்று நீ கூறின், உறக்கத்தில் பிராணவாயு நீங்காமல் நன்கு இயங்கிக்கொண்டிருக்கவும் ஏன் அறிவு நிகழவில்லை?

## விளக்கம்

அதனால், 'அறிவு பூதங்களின் வேறே' என்பது குறிப்பெச்சம். செறிதலுக்கு, 'அறிவு' என்னும் வினைமுதல் வருவித்துக் கொள்க. குறி - குறித்தல்; அறிதல்; முதனிலைத் தொழிற்பெயர். "பிறிதராது" என்பது வினையெச்சம். உயிர் - உயிர்ப்பு. 'உறக்கத்து' என்னும் அத்துச்சாரியை தொகுத்தலாயிற்று. 'உறக்கத்து உயிர் பிறிதராது நிற்க, ஞானம் பிறவாதது ஏன்' என மாறிக் கூட்டுக. (10)

தொடரும்......

# செய்திகள்

தருமையாதீனத்தில்

## ஸ்ரீ மறை ஞானசம்பந்தர் குருபூஜை விழா

சந்தானாசாரியருள் மூன்றுமவராகிய ஸ்ரீ மறை ஞானசம்பந்தர் குருபூஜைத் திருநாள் 16—9—74 திங்கட்கிழமை தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. சமயாசாரியர் சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். அன்று மாலை 7 மணி அளவில் தருமையாதீனத் தமிழ்ப் புலவர்களாகிய திரு. வி. சா. குருசாமி தேசிகர், திரு. வி. சபேசன் ஆகியோர் முறையே 'வினா வெண்பா' 'மறைஞான சம்பந்தர் அருள் வரலாறு' என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் வழிபட்டும், சொற்பொழிவுகளைக் கேட்டும் மகிழ்ந்தனர்.

சிதம்பரம், ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில்

## ஸ்ரீ மறை ஞானசம்பந்தர் குருபூஜை விழா

சிதம்பரம், கனகசபை நகரில் உள்ள தருமையாதீனம் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் திருமடத்தில், சந்தானாசாரியருள் மூன்றுமவராகிய மறை ஞானசம்பந்தர் குருபூஜை விழா 16—9—74 திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. அன்று, சிதம்பரம் திருக்களாஞ்சேரி சிங்காரத்தோப்பில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியிலுள்ள ஸ்ரீ மறை ஞானசம்பந்தர் குருமூர்த்த ஆலயத்தில் பகலில் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. தருமையாதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் மாலை 5 மணி அளவில் எழுந்தருளி ஸ்ரீ மறை ஞானசம்பந்தரை வழிபட்டு, 6 மணி அளவில் ஸ்ரீ நடராஜப்பெருமான் தரிசனத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு சகஸ்ர நாமார்ச்சனை செய்வித்து வழிபாடாற்றிய பின்னர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்திற்கும் அடுத்து தருமைக்கும் எழுந்தருளினர்கள்.

தருமையாதீனச் சார்பில்
ஆதீன பக்தர் திரு. M. SP. சண்முகம் தம்பதிகள்
இந்தியக் குடியரசின் துணைத்தலைவர்
உயர்திரு. பாசப்ப தாசப்ப ஜட்டி அவர்களுக்கு,
அவர் பிறந்த நாளில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின்
அருட்பிரசாதங்களை வழங்கி
ஆசிக் கவசமாகப் பொன்னுடை போர்த்துதல்

மாலை 7 மணி அளவில் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் திருமடத்தில் அண்ணமலைப் பல்கலைக்கழகம், தமிழ் ஆராய்ச்சித்துறை, தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திரு. க. வெள்ளைவாரணம் அவர்கள் 'வினா வெண்பா' என்ற தலைப்பிலும் தருமையாதீனத் தமிழ்ப் புலவர், டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., பி. எச். டி. அவர்கள் "மறை ஞானசம்பந்தர் அருள் வரலாறு" என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர்கள். இறை வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

## சென்னை,

## தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு, வட திருமுல்லைவாயில் ஸ்ரீ மாசிலாமணி யீசுவரர் திருக்கோயிலில் 29—9—74 ஞாயிற்றுக் கிழமை நிலைய அன்பர்களின் உபயமாக, விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. சுவாமிக்குத் திருமுறை அர்ச்சனையும், ஸ்ரீ கொடியிடை நாயகிக்கு சகஸ்ர நாமார்ச்சனையும் நடைபெற்றன. வழிபாட்டிற்குப் பிறகு சமயப்பிரசார கூட்டம் வித்துவான், திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. 'இத் திருக்கோயில் திருப்பணியை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தற்பொழுது ஞானபீடத்தில் எழுந்தருளி ஞான அரசு செலுத்தும் தருமை ஆதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் குடமுழுக்கு விழாவிற்கு, ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகளை அனுப்பி வைத்து அஷ்டபந்தன மருந்தையும், சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்கு வெண்பட்டு, பட்டுப்புடவை, பத்தாறு முதலிய வற்றையும் வழங்கிக் குடமுழுக்கு விழா நன்கு நிகழ அருள் பாலித்து நம்மையெல்லாம் இறைவழிபாட்டுச் சிந்தனையில் ஈடுபடுத்தியுள்ளார்கள். இன்றைய வழிபாடு மண்டலாபிஷேக வழிபாடாக நிகழ்கிறது' என்று கூறித் தலைமையுரையாற்றினர்கள். திரு. S. திருநாவுக்கரசு அவர்கள் சுந்தரர் அருள் வரலாற்றை விளக்கமாக எடுத்துரைத்தார்கள். நன்றியுரைக்குப் பின்னர் கூட்டம் இனிது நிறைவுற்றது.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 9—9—74 திங்கட்கிழமை மாலை 7 மணி அளவில் வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா, சென்னை, ஸ்ரீ ஆனந்தசிவசுப்பிரமணியர் ஆலய அறங் காவலர் திரு K.S. மணிஅய்யர் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. திரு. சு. ஞானப்பிரகாசம், திரு. ந. இராமலிங்கம் ஆகியோர், வேளூர்த் திருப்பதிகங்கள், திருப்புகழ், முருகன் நாமாவளிகள் முதலியவற்றைப் பாராயணம் செய்தனர். தலைவர் தமது தலைமை உரையில் முருகன் பெருமைகளைக் கூறி, கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகன் என்றும் கூறினார்கள். விழா நிறைவில் சந்தனக் குழம்பு, விபூதிப் பிரசாதங்கள் வழங்கப் பெற்றன.

## ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி விழா

தருமையாதீனம், சென்னை சமயப் பிரசார நிலையத்தில் 19—9—74 வியாழக்கிழமை ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி விழா சென்னை உயர் நீதிமன்ற நடுவர், திரு. V. சேதுராமன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. தலைமையுரையில் – ‘விநாயகர் ஓங்கார வடிவமாகத் திகழ்பவர், எந்தக்காரியமும் இடையூறின்றி நடை பெற, அனைவரும் விநாயகரை வழிபட்டே தொடங்குவர். விநாயகரை வழிபட்டால் மக்கள் வாழ்வில் நலமெலாம் பெற்று வாழ்வர்’ என்று குறிப்பிட்டார்கள். கயப்பாக்கம், திரு சோம சுந்தரம் செட்டியார், தருமையாதீனத் தமிழ்ப்புலவர் திரு. N. R. முருகவேள் ஆகியோரின் விரிவுரைக்குப் பின்னர் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

# எதிர்காலம்

**ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்**

ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி,
திருப்பனந்தாள்.

**(ஸ்ரீ ஆனந்த ௵ ஐப்பசி ᴹ 1உ முதல் 29உ முடிய)**
**(18—10—74 முதல் 15—11—74 முடிய)**

ஸ்ரீ ஆனந்த ௵ புரட்டாசி ᴹ 31உ குருவாரம் சூரிய உதயம் முதல் 33 நாழிகை 28 விநாடிக்கு ஸ்ரீ சூரிய பகவான் மேஷ லக்கினத்தில் துலா சங்கிரமணமாக ஐப்பசி மாத பிரவேசம் செய்கிறார். சங்கிரம வாராதிபதி குரு இராசாதிபதியாகிறார். அதன் பலன் இராச பொருளாகிய தேன், நெய், வெல்லம், வெண்ணெய், பால், கற்கண்டு, திராக்ஷை, தேயிலை, காப்பி, கோக்கோ, கரும்பு முதலிய வஸ்துக்கள் விருத்தியாகி மக்கள் சுயதேவை பூர்த்தியாகி ஆதாயத்தையும் ஏற்படுத்தும். இம்மாதம் 2ஆம் தேதி முதல் தொடர்ந்து மழை பெய்வதற்கு அதிகாரம் உண்டு. 8, 9, 10, 16, 17, 20, 21 தேதிகளிலும் மாதப் பிற்பகுதியில் 26, 27, 28, 29 தேதிகளிலும் சந்திரன் மழை நாடியில் இருப்பதால் அதிகமாக மழை பெய்யும். தரும ஸ்தாபனங்கள், திருமடங்கள், ஆஸ்திக சங்கங்கள் மேலோங்கியும் தேவாலயங்களில் ஆறுகால பூசைகள் சிறப்பாகவும் நடைபெறும். பிரஜைகள் உணவு, உடை முதலான வாழ்க்கை சௌகரியங்கள் பலவும் பெற்று ஆஸ்திக உணர்வுடையவர்களாகி க்ஷேமமாக வாழ்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனைத் தரும். 2க்குரிய சுக்கிரன் ஆட்சி பெற்றும் கோசார நற்பல ஸ்தானத்தில் கிரகமும் இருப்பதால் பணவசதி திருப்திகரமாகவே இருந்து

வரும். வரவேண்டிய வட்டி, வாடகை, குத்தகைப் பணம் வந்து சேரும். மூன்றுக்குரிய புதன் நல்ல நிலையில் இருப்பதால் சகோதரர் குடும்பத்தில் நற்காரியங்கள், கட்டிட பிராப்தி முதலிய வற்றை ஏற்படுத்தும். இந்த ராசிக்கு அஜீர்ணம், மூலச்சூடு போன்ற உபத்திரவம் வந்து, குரு வீட்சணம் இருப்பதால் நீங்கும். உடல் ஸ்தானாதிபதியும் சுக்கிரனும் சேர்ந்திருப்பதால் சுக பாக்கியம் திருப்திகரமாக இருந்து வரும். உடலில் உஷ்ண சம்பந்தமாக அயர்வு, ஆயாசம் முதல் 3 தினங்களில் இருக்கச் செய்யும். மற்றைய தினங்கள் சௌகரியத்தை உண்டாக்கும். 10க்குரிய சனி நல்ல நிலையில் இருப்பதால் தொழில் அல்லது உத்தியோகம் சிறப்பாக நடந்து வரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகணி – மிருகசீர்ஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனை உண்டாக்கும். 2க்குரிய புதன் தனது உச்சஸ்தானத்திலும் பின்னர் கோசார நற்பல ஸ்தானத்திலும் இருக்குமாதலால் நூதன வகையில் தனபிராப்தியை உண்டாக்கும். பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். 4க்குரிய சூரியன் நீசபங்கம் அடைந்து 6ல் சுக்கிரன் சப்தமாதிபதி சேர்க்கை ஏற்பட்டதால் சுகபாக்கியங்களும் புத்திரோற்பத்தியும் ஏற்படும். புத்திரர், பௌத்திரர்கள் க்ஷேமத்துடன் இருப்பார்கள். மித்திரர் சமூகத்தினரால் ஏற்பட்ட அல்லல் நீங்கி மன அமைதி ஏற்படும். விவகாரத்தில் வெற்றி உண்டாகும். உத்தியோகத்தில் உயர்ந்த அந்தஸ்தை உண்டாக்கும். கௌரவம் மேலிடும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரமான பலனைத் தரும். பணச் செலவு அதிகம் ஏற்படும். எவ்வளவு வருமானம் வந்தாலும் உடன் செலவை உண்டு பண்ணும். உழைப்பும் அலைச்சலும் அதிகமாகும். பக்குவமான உணவு உட்கொள்ளாத தால் வயிற்றுக் கோளாறு வந்து நீங்கும். சகோதரர் பெற்றோர் களின் மனத்தாங்கல்களும், சரி செய்தலுமாகிய நிலைமை ஏற்படும். ஆனால் விபரீதம் ஒன்றும் நேராது. இந்த ராசிக்கு மேலோர் அனுசரணையும் சகாயங்களும் ஏற்படும். குழந்தைகளுக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படினும் விரைவில் குணமாகும். மாதா

பிதா சௌக்கியம் நன்றாக இருந்து வரும். கணவன் மனைவிக்குள் பரஸ்பரம் ஒற்றுமை நிலவும். குடும்ப சம்பிரதாய விஷயங்கள் மகிழ்ச்சியுடன் நடைபெறும். உத்தியோகம் அல்லது செய் தொழிலில் கடமைப் பணி நன்றாகவும் சிறப்பாகவும் நடந்து வரும்.

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்

கடக ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும் 2க்குரிய சூரியன் நீசம் பெற்று அந்தஸ்தானுதிபதி ஆட்சி பெற்றதால் சுகானுபவங்கள் நன்றாக இருக்கும். வீடு, வாகனங்களில் முதலீடு செய்ய நேரும். குடும்பத்தினர் அக்கம்பக்கத்தவர்களைத் திருப்தி செய்யும் வகையிலும், குடும்ப சம்பிரதாய விசேஷங்களிலும் கூடுதலான கணக்கில் தனம் செலவாகும். 3க்குரிய புதன் உச்சஸ்தானத்திலும் மாத பிற்பகுதியில் கோசார நற்பல ஸ்தானத்திலும் இருப்பதால் சகோதரரின் குடும்பம் சிறப்புடன் விளங்கும். இந்த ராசிக்கு கல்வித்துறையில் பிரசித்தம் ஏற்படும். தொழில் துறையில் தொழில் விஸ்தரிப்பு நிலைமை ஏற்படும். விவசாயத்தில் செந்நெல் பாக்கியம் விருத்தியாகும். சிவந்த வஸ்துக்கள் பிராப்தி ஏற்படும். மறைமுகமான எதிர்ப்புக்கள் இருந்து வரும். இருப்பினும் தெய்வ பலத்தால் எதிர்ப்புக்கள் சூரியனைக் கண்ட பனிபோல் விலகும். உத்தியோகத்தில் நற்பெயரும் நல்லோர், பெரியோர் போற்றுதலும் ஏற்படும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனைத் தரும். 2க்குரிய புதன் நற்பலனுடன் திகழ்வதால் தாராளமாக தனவசதி உண்டாகும். வட்டி, வாடகை, குத்தகைப்பணம் முதலான வருமானங்கள் வந்து சேரும். செந்நெல் பாக்கியம் திருப்திகரமாக இருக்கும். 3க்குரிய சுக்கிரன் நிலையால் சிவப்பு வெள்ளைக் கற்கள் பதித்த ஆபரண பிராப்தி ஏற்படும். 5க்குரிய குரு நிலையால் புத்திரர்களின் கல்வி, தொழில் சிறப்பானதாகும். இம்மாதம் புத்திர குழந்தையும் ஏற்பட கிரகங்கள் நன்கு அமைந்துள்ளன. மனைவிக்கு உடல் அயர்வும் நரம்புக்கோளாறும் ஏற்படினும் உடன் குணமடையும். சத்துருக்கள் ஏற்படாமல் யதார்த்த நிலைமை இருந்து வரும். தொழில் ஸ்தாபனத்தில் அலுவலர்கள், பணியாட்கள் ஒத்துழைப்பு நன்றாக இருந்து வரும். உத்தியோகத்தில் தன்னுடைய திறமை பிறர் போற்றுகிறபடி இருக்கும்.

**6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$.**

கன்னியாராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை இருந்து வரும். 2க்குரிய சுக்கிரன் திருதிய அஷ்டமாதிபதியுடன் சேர்ந்ததால் பணவசதியில் பற்றாக்குறை இருந்துவரும். அளவுக்கு மேல் செலவு ஏற்படும். கண் வலி, பல் வலி, தலைநோய் முதலிய வற்றால் உபத்திரவம் ஏற்படினும் எளிதில் குணமாகும். பந்துக் களால் ஓர் மனக்கஷ்டத்தை உண்டாக்கும். வீடு, வாகன வாழ்க்கை சௌகரியங்கள் திருப்திகரமாக இருந்து வரும். பெற்றோர்களுக்கு இருந்துவந்த அல்லல்களும், மனக்குறைகளும் தெய்வானுகூலத்தால் நீங்கி மனத்தெளிவு ஏற்படும். உத்தி யோகம் அல்லது தொழிலில் நல்ல கௌரவம் ஏற்படும். மேலதி காரிகள் சிலாகித்தல், கௌரவித்தலால் கடமைப் பணியைத் தவிர்க்க இயலாது. தெய்வ வழிபாட்டிலும், புண்ணிய காரியங் களிலும் மனம் ஈடுபடுவதால் வாழ்க்கை நலம் சிறப்புடையதாகும்.

**7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$**

துலா ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். உடல் ஸ்தானத்தில் உள்ள கிரக சேர்க்கையால் வாழ்க்கை வசதிகள் நன்றாக இருக்கும். வருமானத்தை விட செலவுகள் அதிகமாக இருக்கும். வட்டி, வாடகை, குத்தகைப் பணம் வரவு ஆகும். உடன் பிறந்தவர்களின் வாழ்க்கை நலம் பிரசித்தமானதாகும். கல்வியிலும் கலைத் துறையிலும் மேன் மையும் தொழிலில் சிறப்பும் ஏற்படும். சரீரத்தில் உஷ்ணதிக் கமும் மூல வியாதி போன்ற உபத்திரவமும் வந்து உடன் குணமாகும். ஸ்திரசொத்தில் பரிவர்த்தனை அல்லது பாகப் பிரிவினை ஏற்படும். குரு வீட்சணம் இருப்பதால் உயர்ந்த நோக்க செயல்களிலேயே ஈடுபடுத்தும். புத்திரர்களின் முன்னேற்றம் சம்பந்தமான கவலை இருப்பினும் தெய்வானுகூலத் தால் மாதப் பிற்பகுதியில் நல்ல நிலைமையும் மன அமைதியும் ஏற்படும்.

**8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் - கேட்டை**

விருச்சிக ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை இருக்கும். 2க்குரிய குரு மிச்சிரமான நிலையில் இருப்பதால் பணவசதி சுமாராக இருக்கும். பிறரால் சகாயம் ஏற்படுதல் காரணமாகவும் சக நண்பர்களின் தொடர்பு காரணமாகவும்

அதிகமான தனச்செலவை ஏற்படுத்தும். சம்பிரதாயமான விசேஷங்களைச் செய்வதற்கு பணம் பற்றாக் குறையாய் இருக்கும். மற்றைய கிரகங்களின் சஞ்சாரத்தால் பூமி, வீடு சீர்படுத்தும் வகையில் அதிக செலவு நேரும். பந்து ஜனங்களிடம் மனத் தாங்கலும் உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கோபத்துக் குள்ளாகுதலும் நேர்ந்தாலும் உடன் புத்தி சாதுரியமாக சரி செய்துக்கொள்ளும் தன்மையை உண்டாக்கும். வழக்கு விவகாரங் களில் நடுவு நிலைமையாக இருக்கும். எந்த ஒரு காரியமும் தயக்கமாக இருப்பினும் முடிவில் நற்பலனையே கொடுக்கும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர் ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக இருக்கும். 2க்குரிய சனி நிலையால் தன வசதி சுமாராக இருக்கும். பின் வருவனவற்றை எதிர்பார்த்து மூலதனம் செலவாகும். ஆனால் எதிர்பார்த்தபடி இல்லாமலும், மற்ற கிரகங்களின் நிலையால் வீடு, வாகனங்களின் வசதி போதாமலும் இருக்கும். சகோதரர் குடும்ப சம்பந்தமாக கவலையும், அலைச்சலையும் உண்டாக்கும். அம்மான் குடும்பம் முன்னேற்றத்திற்கு வழி துறைகள் ஏற்படும். இம்மாதம் பெண்மகவு ஏற்படுவதற்குரிய கிரகநிலை நன்றாக அமைந்துள்ளது. வழக்கு விவகாரங்களில் மனோ வாட்டமான நிலைமையாய் இருந்துவரும். தாம்பத்திய வாழ்க்கையில் வெறுப்புணர்ச்சி ஏற்படும். எவ்வளவு இக்கட்டான நிலையிலும் குலஇழக்கு ஏற்படாதவாறு காத்துக்கொள்ளும் நிதானமும் தைரியமும் ஏற்படும். தொழில் அல்லது உத்தி-யோகத்தில் சிறப்பும் பொருளாதரமும் ஏற்படும். இம்மாதம் 18உ க்குமேல் எதிர்பாராத வகையில் பொருளாதாரம் முதலிய நற்பலன்களே ஏற்படும்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகர ராசி 9 பாதங்களும் இம்மாதம் நற்பலனைக் கொடுக்கும். 2ல் குருவும் 2க்குரிய சனி நற்பல ஸ்தானத்திலும் இருப்பதால் தனவசதி தாராளமாக இருந்துவரும். மற்றக் கிரகங்களின் நிலையால் சகோதரர் குடும்பங்களின் சௌகரியம் திருப்திகரமாய் இருந்துவரும். புத்திரர் பௌத்திரர்களின் சௌகரியமும், குலப் பெருமையும் மனமகிழ்ச்சியும் உண்டாகும். பழைய கடன் தீர்ந்து வரவேண்டியவை தவணைகளில் வந்து சேர்வதாக இருக்கும்.

எதிராளிகளின் விஷமத்தனம் இந்த ராசியை ஒன்றும் செய்ய இயலாது. கணவன் மனைவியின் ஒற்றுமையும், வீட்டில் இலக்ஷ்மிகரமும் இருக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வையும் பொறுப்பையும் உண்டாக்கும். மேலோரின் நல்ல அபிமானத்தை யடைய ஏதுவாகும். பலதரப்பட்ட சமூகத்தினரிடம் நன்மதிப்பை ஏற்படுத்தும். ஓர் பொது நலப்பணியை ஏற்க நேரும்.

**11. கும்பம் :- அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾**

கும்பராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனவசதியும் குடும்ப நலனும் சுமாராக இருக்கும். தொழில் அல்லது உத்தியோகத்தில் வருகிற பொருள் போதாமல் புதிய லேவாதேவியை மேற்கொள்ள நேரும். வீடு வாகனங்களின் சௌகரியம் திருப்திகரமாக இருந்துவரும். குடும்ப சம்பிரதாய விசேஷங்கள் ஆடம்பரமின்றி நடக்கும். புத்திர பிராப்தியும் லிகித மூலமான நற்பலன்களும் ஏற்படும். சகோதர சகோதரிகள் புத்திரர்களின் நலம் நன்றாக இருக்கும். மனைவியின் உடல் நலப் பாதிப்பும் உடன் குணமும் ஆகும். ஆசிரியர், வழக்கறிஞர், எழுத்தர் முதலான பணியாளர்களாயின் நல்ல ஆதாயம் ஏற்படும். வெளியூர் பயணங்கள் ஏற்படும். முயன்ற காரியங்கள் வெற்றியாகும். விவசாயத்தில் நல்ல விளைச்சலை உண்டாக்கும்.

**12. மீனம் :- பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி**

மீன ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக இருக்கும். 2க்குரிய குஜன் மிஸ்ரனாக இருப்பதால் உடல் நலக் குறைவாலும் சகோதர சகோதரிகளாலும் பணச்செலவு அதிகமாகும். மற்றக் கிரகங்களின் சஞ்சாரத்தால் வீடு வாகனத்தில் விருத்தி ஒருபுறமும் குடும்ப சுமை ஒருபுறமும் இருந்துவரும். பூர்வ பொருளின் மூலமான ஒரு சச்சரவு வந்து நீங்கும். இம்மாதம் ஓர் சுபகாரியச் செலவை உண்டுபண்ணும். புத்திரர்களின் கல்வி, தொழில் சிறப்புடன் விளங்கும். தாம்பத்திய வாழ்க்கையில் திருப்திகரமான நிலைமை இருந்துவரும். தொழில் அல்லது உத்தியோகத்தில் அதிக உழைப்பும், கடமையும், பொறுப்பும் அதிகரிக்கும். கண் விழிப்பும் உஷ்ணதிக்கமும் ஏற்படினும், மாதப் பிற்பகுதியில் ஓய்வும் அமைதி நிலையும் ஏற்படும்.